RATNAVALI,

A TALE IN TAMIL.

FOUNDED ON

The Sanskrit Drama

OF

Sri Harsha Deva

BY

T. E. SRINIVASA RAGAVACHARIAR.

Head Tamil Pandit, Presidency College, Madras.

ரத்நாவலி.

இஃது

ஸ்ரீஹர்ஷதேவன் செய்த

ஸமஸ்கிருத நாடகத்தைத் தமிழில் கதையாக,

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பிரதமபண்டிதராகிய

தி. ஈ. ஸ்ரீநிவாச ராகவாசாரியர்

இயற்றியது.

SECOND EDITION.

MADRAS:

PUBLISHED BY

THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1880.

COPYRIGHT.

Price One Anna. விலை அணா ௧.

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யும்

சிறுபுத்தகங்களின் பட்டி.

ஜாவிநோதினியின்

விசேஷப் புதுப்பதிப்புகள்.

	அணா	பை
அரணியமித்திரரும் சத்துருக்களும்	0	1
ஒரு ரூபாய் சொல்லிய தன் வரலாறு	0	1
நீராவியின் வல்லமையை முதலில் அறிந்த கதை	0	1
பொன்னிலும் முயற்சி சிறந்தது	0	1
மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது?	0	1
இன்பத்தைத் துன்பன் விவாகஞ்செய்தது	0	1
இவ்வுலகத்திற்குமேல் என்ன இருக்கிறது?	0	2
ஒரு நியாயாதிகாரியின் கதை	0	2
ஜப்பான் தேசத்து முற்கால தற்கால நிலைமை	0	2
புலியினிடத்துச் செய்த சாகஸம்	0	2
பொன்னூல் கதை	0	2
இத்தேச வைத்தியவிஷயம்	0	2
செல்வத்தையும் வறுமையையும் பற்றிய கதை	0	2
சமுத்திரம் உப்பாயிருப்பதேன்?	0	2
பொருள்வரும் வழி	0	2
ஆசையும் கடமையும் முரணியது	0	3
நான் அது செய்யமாட்டேன்	0	3
தர்மமே ஜயம்	0	3
பெற்றோருக்கறிக்கை	1	0
மந்திரவீணை அல்லது மெய்மை பொய்மையைப் பற்றிய கதை	1	0

RATNAVALI,

A TALE IN TAMIL.

FOUNDED ON

The Sanskrit Drama

OF

Sri-Harsha Deva

BY

T. E. SRINIVASA RAGAVACHARIAR,
Head Tamil Pandit, Presidency College, Madras.

ரத்நாவலி.

இஃது

ஸ்ரீஹர்ஷதேவன் செய்த

ஸம்ஸ்கிருத நாடகத்தைத் தமிழில் கதையாக,

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பிரதமபண்டிதராகிய

தி. ஈ. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர்.

இயற்றியது.

SECOND EDITION.

MADRAS:

PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1880.

COPYRIGHT.

C. K. S. Press, Vepery, 1880.

முகவுரை.

இந்த நாடகம் சம்ஸ்கிருதத்தில் காச்மீரதேசத்தின் அரசனாயிருந்த ஸ்ரீஹர்ஷதேவன் செய்ததாய் வழங்கிவருகின்றது. காவியபிரகாசிகை என்னும் நூலில் தாவகன் என்கிற கவி ஸ்ரீஹர்ஷன்பேராலே செய்து பரிசுபெற்றானென்று இருக்கிறது. இது முந்தியதென்றும், இதைப்பார்த்துக் காளிதாஸமகாகவி மாளவிகாக்கினிமித்திரம் என்னும் நாடகத்தைச் செய்தாரென்றும் பங்காளதேசத்தில் சிலர் சொல்லுகிறார்கள். இந்த நாடகம் பிறந்தகாலம் 800 வருஷத்துக்குள்ளாகத் தெரிகிறதினால் இப்படிச் சொல்வது சரியன்று.

இந்த நாடகத்தலைவனாகிய உதயனமகாராஜன் பாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனமகாராஜாவின் சந்ததியில் 26 வனாகிறான்; இந்தச் சந்ததியில் பிறந்த நிசக்ஷு என்பவன்காலத்தில், இவர்களுக்கு ராஜதானியாயிருந்த அஸ்திநாபுரியானது கங்கையின் வெள்ளத்தினால் அழிந்துபோனதினால் கவுசாம்பி நகரம் ராஜதானியானதாய்த் தெரியவருகிறது.

இதில் காணப்படும் முக்கிய நீதியாவது, எப்படிப்பட்ட காரியமும் தெய்வானுகூலமிருந்தால் கைகூடும் என்பதாம். அன்றியும் தக்க தோழமையிருந்தால் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதும், எப்படிப்பட்டவர்களுக்கும் பெரிய சங்கடம் நேரிடுமென்பதும் விளங்குகின்றன.

இந்நாடகத்தில் வருபவர்களின்

அட்டவணை.

புருஷர்கள்.

உதயனன் அல்லது வச்சராஜன்—கவுசாம்பி நகரத்தையாளும் அரசன்.

யவுகந்தராயணன்—மேற்படி அரசனுடைய பிரதான மந்திரி.

வசந்தகன்—மேற்படி அரசனுக்கு விநோத சிநேகிதன்.

வசுபூதி—சிங்களத்தீவின் அரசனுடைய மந்திரி.

பாப்பிரவியன்—உதயனனுடைய அந்தப்புரக் காவற்காரன்; சிங்களத்துக்குப் போய்வந்தவன்.

விஜயவர்மா—அரசனுடைய ஒரு சேனாபதி.

சர்வசித்தி அல்லது சம்வரணசித்தி—இந்திரஜால வித்தைக்காரன்.

ஸ்திரீகள்.

வாஸவதத்தை—அரசனுடைய மனைவி.

ரத்நாவலி அல்லது சாகரிகை—சிங்களத்தரசன் மகள்.

காஞ்சனமாலை—வாஸவதத்தைக்கு முக்கிய வேலைக்காரி.

சுசங்கதை—வாஸவதத்தையின் வேலைக்காரிகளில் ஒருத்தி; ரத்நாவலிக்குப் பிரியமான தோழி.

நிபுணிகை, மதனிகை, சந்தனலதிகை—அரசியின் வேலைக்காரிகள்.

வசுந்தரை—அந்தப்புரத்தைக் காவற்பெண்களில் ஒருத்தி.

கதையில் ஓட்டிவரும் ஜனங்கள்.

விக்கிரமபாகு—சிங்களத்தின் அரசன்; வாஸவதத்தைக்கு நல்லம்மான்; ரத்நாவலிக்குத் தந்தை.

ருமண்வான் அல்லது ருமண்வந்தன் — உதயனனுடைய சேனாதிபதிகளில் ஒருவன்.

ஜயவர்மா—மேற்படியானுடைய தம்பி.

ரத்நாவலி.

அஸ்திநாபுரியை ஆண்டுவந்த சந்திரவம்சத்தரசன் சந்ததியிற்பிறந்த உதயனன் என்றும் வச்சராஜன் என்றும் பேர்படைத்த ஓரரசன், கவுசாம்பிநகரத்திலிருந்து அறநூலும் நீதிநூலும் வழுவாதபடி செங்கோல் செலுத்திவந்தான். அவன் உஜ்ஜயினீபட்டணத்தரசன் மகளாகிய வாஸவதத்தை என்பவளைக் கலியாணஞ் செய்துகொண்டு, அவளோடு வேடிக்கையாகச் சில காலங்கழிக்கக் கருத்துக்கொண்டிருந்தான். அக்கருத்து நிறைவேறுமாறு அவனுக்கு வாய்த்திருந்தது. எப்படியெனில், அவனுடைய மந்திரியாகிய யவுகந்தராயணன் என்பவன் புத்திமதி விவேகங்கள் சிறந்தவனாயிருந்ததுமன்றி, ராஜபக்தி மிகுந்தவனாயுமிருந்ததனால் ராஜகாரியங்களை அவன் வசம் ஒப்பிக்கக்கூடியதாயிருந்தது. ஆனதுபற்றி அரசன் அப்படியே செய்து தன் விருப்பத்தின்படி நடந்துவந்தான்.

இப்படியிருக்க, சிங்களதேசத்தரசனாகிய விக்கிரமபாகு என்பவனுக்கு ரத்நாவலி என்று மகளொருத்தியிருந்தாள். அவள் மிகு பாக்கியசாலியென்றும், அவளைக் கலியாணஞ்செய்பவன் விசேஷராஜ்யசம்பத்தைப் பெறுவனென்றும் ஒரு யோகசித்தன் சொல்

யிருந்தான், அதை யவுகந்தராயணன் கேள்விப்பட்டபோது, அந்தக் கன்னிகையைத் தன் அரசனுக்கு விவாஹஞ் செய்விக்கவேண்டுமென்று தக்க தூதனை அவ்வரசனிடம் அனுப்பினான். அவ்வேந்தனோ வாஸவதத்தைக்கு நல்லம்மானானதனால் அவளுக்கு இடையூறு செய்யக்கூடாதென்று மகளைக் கொடுக்க மனமில்லாதிருந்தான். அதனாலே இம்மந்திரி: "வாஸவதத்தை தீயிற்பட்டு மாய்ந்தாள்" என ஒரு பொய்ச்செய்தி சிங்களத்திற் சாரும்படி செய்து, பின்பு தன் அரசனுக்கு ரத்நாவலியைத் தரும்படி முன்போலவே தூதனுப்பினான். அதற்கு அந்தச் சிங்களராஜன் ஒப்புக்கொண்டபடியால், மந்திரியானவன் அந்த ராஜகுமாரியை இட்டுக்கொண்டுவரும்படி அந்தப்புரத்துக் காவற்காரனான பாப்பிரவியன் என்பவனை அவ்விடத்திற்கு அனுப்பினான். அவன் போய்ச் செய்திசொன்னவுடனே விக்கிரமபாகு, தன் மகளின்பேருக்கு ஏற்றபடி சிறந்த ஓர் ரத்நஹாரத்தையளித்து, அவளைத் தன் மந்திரியான வசுபூதி என்பவனோடு கூட்டி அனுப்பினான்.

அவனிடத்தினின்றும் விடைபெற்று பாப்பிரவியனும், வசுபூதியும், ரத்நாவலியும் புறப்பட்டுக் கப்பலேறி வந்துகொண்டிருக்கையில் திடீரென்று உண்டான ஒரு பெருங்காற்றினால் மரக்கலம் உடைந்துபோயிற்று; போகவே, ஆண்மக்கள் இருவரும் தனித்தனி ஒரு பலகையைப் பற்றிக்கொண்டு வருந்தி நீந்தி ஓர் புறத்தில் கரையேறி, அயோத்தியின்மேல் படையெடுத்துச் சென்றிருந்த கவுசாம்பியின் சேனாபதியாகிய ருமண்வான் என்பவனிடஞ் சேர்ந்தார்கள். அப்பெண்ணோ தாவரிக்கமாட்டாமல் ஒரு கொம்பைப்

பிடித்துக்கொண்டு தடுமாறிநிற்கையில், அவ்வழியே கவுசாம்பிக்குப் போய்க்கொண்டிருந்த மற்றோர் கப்பற்காரன், இவளொரு ராஜகன்னிகையென்று அறிந்து, அவளைத் தன் கப்பலில் ஏற்றிக்கொண்டுபோய் யவுகந்தராயணனிடத்தில் சேர்த்தான். அதுகண்டு அந்த மந்திரி:

"மற்றொரு தீவினேனு மறிகட னடுவினேனுஞ்
சுற்றுறு திசையினந்தச் சூழலினேனுந் தெய்வம்
உற்றதா மாயினெஞ்சத் துற்றன வுதவுமென்று
சொற்றன ரன்றோநூலின் சூழ்ச்சியிற் சிறந்தோர்தாமே."

"தெய்வம் அனுகூலமானால் வேறு தீவிலிருந்தாகிலும், கடலின் நடுவிலிருந்தாகிலும், திசையின் கடையிலிருந்தாகிலும், இஷ்டமான பொருளைக் கொணர்ந்து கொடுக்கும்" என்கிறபடி, தன் எண்ணம் பலித்ததென்று களிகூர்ந்தவனாய், இப்பெண்ணின் வரலாற்றை வெளியிடாமல், 'இவள் கடலில் அகப்பட்டாள்' என்று வாஸவதத்தையினிடம் அனுப்பிவிட்டான். ஸாகரத்தில் அகப்பட்டதனால் அவளுக்குச் சாகரிகை என்று பெயரிடப்பட்டது. அரசன் அனுமதியின்றிப் பொய்ச்செய்தி பிறப்பித்துத் தான் செய்ததனால், அரசற்கும் அரசிக்கும் மனஸ்தாபமாயிருக்குமென்றும், இவ்வளவுதூரம் கூட்டிய தெய்வம் மற்றதையும் தானே கூட்டும், அதுவே யாவர்க்கும் நலமாயிருக்குமென்றும் நினைத்து, மந்திரி அக்கன்னிகையின் உண்மையை வெளியிடவில்லை.

இது இப்படியிருக்க, வஸந்தகாலம் வந்ததனால், பட்டணத்து ஜனங்களெல்லாம் வீதிகள்தோறும் மத்தளம் தாளம் முதலியவைகளோடு பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும், பீச்சாங்குழலினாலே ஒருவர்மேலொருவர் தண்ணீர் இறைத்துக்கொண்டும், கந்தப்பொ

டிகளைத் தூவிக்கொண்டும் காமன்பண்டிகை கொண்டாடிவந்தார்கள். அவ்வேடிக்கையைக் காண அவ்விராஜன் தன் விநோதத்தோழனாகிய வஸந்தகன் என்பவனோடு ஓர் மேடைமேலேறி அச்சனங்களைப்பார்த்துச் சந்தோஷமடைந்து, வஸந்தகனை நோக்கி: தோழா! ராஜ்யபாரத்தைச் சீராய் நிறைவேற்றத்தக்க மந்திரி எனக்கு வாய்த்ததனால் நான் மனக்கவலையின்றி மிகவும் ரஸிகையாகிய வாஸவதத்தையுடன் விநோதமாய்க் காலங்கழிக்கிறேன். இப்போது இந்த வஸந்தகாலத்தில் நகரத்தார் யாதொரு குறையுமின்றி வஸந்தோச்சவங் கொண்டாடுவதை உன்னோடுகூடக் காண்பதனால் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியுண்டா இன்றது என்றிப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், மதனிகை, சந்தனலதிகை என்கிற சேடிமார் இருவர், அக்காலத்துக்குரிய வேடம் பூண்டுவந்து கும்பிட்டு, "ஜயவிஜயீபவ எங்கள் பெருமானே! எம்பெருமாட்டியவர்கள், 'நமது உத்தியானவனத்தில் செவ்வசோகமரம் நிறையப் பூத்திருப்பதால், இக்காலத்தில் செய்ய வேண்டிய காமபூஜையை அதனிடத்தில் செய்ய விரும்புகிறேன்; ஐயரவர்கள் அங்கு எழுந்தருளவேண்டும்' என்று விண்ணப்பம் பண்ணச்சொன்னார்கள்" என்று சொல்லினர். அது கேட்டு வச்சராஜன்: இதோ வந்தேன், போங்கள் என்று அச்சேடிமாரை அனுப்பிவிட்டுத் தானும் தன் தோழனுமாய் மகரந்தோத்தியானம் என்கிற அந்தத் தோட்டத்திற் சென்று அதின் அழகை வர்ணித்துக்கொண்டிருந்தான்.

அத்தருணத்தில் ராணியானவள் குலுங்கப் பணி பூண்டு குச்சிரியப்பட்டுடுத்துப் பூஜைக்குரிய பாத்திரமுதலியவைகளைக் கைக்கொண்டு, சாரிகை, காஞ்

சனமாலை என்கிற பரிசாரிகைகள் பின்தொடர, அத் தோட்டத்துக்கு வந்துசேர்ந்து, காஞ்சனமாலையானவள்: "அம்மா! நீர் வளர்த்த ஜாதிமல்லிகை இதோ பூத்திருக்கின்றது பாரும்; நம்மரசர் வெகு கஷ்டப்பட்டுக் காலமல்லாக்காலத்திலும் பூக்கச்செய்த நவமாலிகை இதோ இருக்கிறது பாரும்" என்றிப்படி அதின் விசேஷங்களைக் காட்டிக்கொண்டே அவ்வசோக மரத்தடியிற்கொண்டுவந்துவிட, அதனைப்பார்த்துக் களிப்பெய்திநின்றாள். நிற்கையில் அந்த ராணி: "ஓகோ, நாமொன்று பிசகிப்போனோமே; இந்தச் சாகரிகையை நம்மையர் கண்டால் விருப்பங்கொள்வர் என்று அவர் கண்ணுக்கு மறைத்துவைத்திருக்கிறோமே, அவளை இப்போது ஐயர் காணும்படி நேர்ந்ததே, என்னசெய்வோம், நல்லதாகட்டும், ஏதாயினும் ஒரு சாக்கிட்டு இச்சிறுக்கியை அப்புறம் அனுப்பிவிடவேண்டும்" என்று யோசனைகொண்டவளாய், சாகரிகையை நோக்கி: "சாகரிகாய்! இப்போது நமது அந்தப்புரத்திலுள்ளோர் யாவரும் குடித்து வெறித்து, உடம்பு தெரியாதிருக்குங்காலமல்லவோ? இப்படிப் பட்டவேளையில் உன் கையில் ஒப்பித்த *நாகணவாய்ப்புள்ளை விட்டுவந்தையே; அது எங்ஙனமாயிற்றோ! ஆதலால் உன் கையிலிருக்கிற மலர்முதலியவற்றைக் காஞ்சனமாலிகைகையில் கொடுத்துவிட்டு நீ விரைவாய்ச்சென்று அப்புள்ளைப் பாதுகாக்கக்கடவை" என்று அவளைப் புறத்தே அனுப்பிவிட்டாள். அந்தச் சாகரிகையும் சிறிதுதூரம் சென்றபிறகு, சாரிகையைச் சுசங்கதைவசம் ஒப்பித்துவந்தேனு

---

*நாகணவாய்ப்புள் என்பதும் சாரிகை என்பதும் மைனாக் குருவியின் பெயர்.

கையால் அதற்கொன்றுங் குறைவில்லை. ஆகவே, இங்கேதானே மறைவிலிருந்துகொண்டு இவர்கள் பூஜைசெய்யும்வகை நம்முடைய தந்தைமாளிகையில் நடக்கும்விதமோ வேறுவிதமோ பார்ப்போம்; நாமும் பூஜைசெய்வோமென்று ஒரு மரத்தின் மறைவில் நின்று பூக்கொய்துகொண்டிருந்தாள்.

தேவியானவள் காஞ்சனமாலையைக்கொண்டு மன்மதப் பிரதிமையை ஸ்தாபித்து, அதற்கு ஆடையணிகளும், கலவைச்சாந்து பூமாலை முதலியவைகளும் அணிந்து பூஜைசெய்துகொண்டிருக்க முன்னமே அங்கு வந்திருந்த வேந்தன் சிலம்போசையால் தன் நாயகி வந்ததையறிந்தும்,

"பகர்ச்சி மடவார் பயிலகோன் பாற்றல்
நிகழ்ச்சிபெறு நெஞ்சத் திட்பம்—நிகழ்ச்சிபெறும்"

என்று ஆண்பிள்ளைகளுக்குச் சொல்லியபடி, மனமொத்த ஆடவர் உரையாடினால் பெண்டிர்க்கும் நோன்பில் மனந்தளருமாதலின், யாம் இப்பொழுது அங்குச்செல்லுதல் நன்றன்றென நினைத்து, இருந்தவிடத்திருந்தே அக்காலத்தில் அவளுடைய வடிவழகையுஞ் செயலழகையும் நோக்கி ஆனந்தித்துக்கொண்டிருந்து, பூஜைமுடியுந் தருவாயில் பாங்கனோடு அங்குச்சென்றான். ராணி தன் நாயகனைக் கண்டதும் அருகில்வந்து தக்கமரியாதையோடு இனியமொழிகள் சொல்லியழைத்து, ஆசனமிட்டுச் சந்தனம்பூசி, மாலைசூட்டிப் பழம் வெற்றிலைபாக்குகள் அளித்துப் பூஜையை முடித்துநின்றாள்.

மரத்தின் மறைவிலிருந்த சாகரிகை இவற்றையெல்லாம் பார்த்து, 'மற்றவையெல்லாம் நம்மகத்தில் நடப்பதுபோலிருந்தாலும், பேரழகுள்ள இம்மகாராஜ

னைப் பூஜித்தது நேரே மன்மதனைப் பூஜித்ததாகின்றது; இதுதான் இங்கு விசேஷம்' என்று மனதில் சிந்தித்துக் காதல்கொண்டு, 'என் தந்தை எனக்குக் கணவனுகக் கருதின மகா புருஷனை யான் துர்ப்பாக்கியத்தால் பெருமற்போனதுமன்றி, இதுவரையிலும் கண்ணுரக் காணவும் பெற்றிலேன். இன்று சிறிதுநேரமாயினும் பார்த்ததனுல் என் கண்கள் பயன்பட்டன, என்று கொஞ்சம் களிப்போடு தான் கொய்த மலர்களை மனத்தால் காமன்மேல் தூவித் தியானித்து நான் யார்கண்ணிலும் படாமற்போவது நலமென்று மெள்ளமெள்ளப் போய்விட்டாள்.

இவ்வளவில் பொழுதுபட்டதென *வைதாளிகர் பாடினதைக்கேட்டு, அரசன்: இனி அனுட்டானவேளையாயிற்று, போகவேண்டுமென்று திரும்பிக் கீழ்த்திசை நோக்கி: சந்திரன் உதயமாயிருந்ததனுல், அதை வர்ணித்துத் தன் நாயகிக்குச் சொல்லிக்கொண்டே அரண்மனை போய்ச்சேர்ந்தான்.

அங்கிருந்துபோன சாகரிகை அரசன்மேல் ஆசையால் மனவருத்தமுற்றவளாய் யாருமில்லாமல் ஏகாந்தமாயிருந்த †கதளீகிருகத்திற்சென்று நாயகனைப்போல் ஒரு சித்திரத்தை எழுதியாகிலும் காலங்கழிப்போமென்று எண்ணி, முன் கண்ட பாவனை மனதிலிருப்பதனுல் அதைக்கொண்டு ஒரு பலகையில் அரசன் உருவமெழுதி வைத்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் சுசங்கதையானவள் சாகரிகை தன்கையிற் கொடுத்திருந்த சாரிகையோடு அவளைத் தேடிக்கொண்டே

* வைதாளிகர், காலமறிவிப்போர்.

† கதளீகிருகம் என்பது வாழைத்தோட்டத்தில் இருப்பதோர் கட்டிடம்.

அவள் இந்த ஏகாந்த ஸ்தானத்தில் இருக்கலாமென்று அதிற் புகுந்து அவளருகிற் சென்றாள். அவளோ ஆசைப்பெருக்கத்தால் கண்ணீர் ததும்பிச் சித்திரப்பல கைமேல் சிந்த, “சித்திரத்திலும் என் நாயகனைக் காண வொட்டாமல் நீரானது கண்களை மறைக்கின்றதே” என்று ஏங்கிச் சிந்தை கலங்கிக்கொண்டிருந்தாள். சுசங்கதை அவளைப்பார்த்து: “என் தோழி ஏதோ பெருங்காதல்கொண்டு ஏங்கினவள்போல் இருக்கிறாள். சித்திரத்திலிருக்கும் உருவம் யாருடையது பார்ப் போம்” என்று நிதானித்துப்பார்த்து, அரசன் உருவ மென்று அறிந்துகொண்டு: “ஓ சாகரிகாய்! நன்று நன்று; அன்னப்பெடை தாமரைத்தடாகத்தையன்றி வேறு விரும்புமோ” என்றாள். அதைக்கேட்டு அந்த ராஜ கன்னிகை தலைநிமிர்ந்துபார்த்துச் சித்திரப்பலகையை முன்றானையால் மறைத்துக்கொண்டு: “ஓ என் உயிர்த் தோழியாகிய சுசங்கதாய்! எங்கிருந்து வருகிறாய்” என்று வினவ, அத்தோழி: “இவள் தன் ரகசியம் வெளியாகக்கூடாதென்று வருந்துகிறாள், இவளுக்கு நன்மையை யோசிக்கக்கடவோம்” என்று சாகரிகை யை நோக்கி: “அடி என் உயிரே! சித்திரத்தில் யாரை எழுதினாய்” என அவள், இக்காலத்திற்கேற்ப மன்ம தனை எழுதினேனென்றாள். அதற்குப் பாங்கி: “அப் படியா நல்லது, பலகையை என் கையில்தா” என்று வாங்கி, அதிலே அரசன்பக்கத்தில் சாகரிகையை எழுதினாள். அதை அந்த ராஜகுமாரி உற்றுப்பார்த் து, சற்று முகக்கடுப்போடு: “பாங்கி இதென்ன? என் னுருவம் எழுதினையே” என்று சொல்ல, சுசங்கதை: “அடி என் உயிரே! ஏன் காரணமின்றி முகங்கடுக்கிப் பேசுகிறாய்? நீ எழுதின காமனுக்குப் பக்கத்தில் ரதி

தேவியை எழுதினேன். இருக்கட்டும், மனமொத்த என்னோடும் ஏன் மறைத்துக் கூறுகின்றாய்? உன்னைப் போன்ற பேரழகுடையாளுக்கு இப்படிப்பட்ட மேலான புருஷனிடத்து மனஞ்செல்வது தகுந்ததுதான். நீ சொல்வதை நான் வெளிப்படுத்தேன். தேவியின் பாதத்தாணை; ஒருவேளை இந்தப் பறவை சொல்லுமோ என்னவோ என அஞ்சுகிறேன்" என்று வினவ, சாகரிகையானவள், கண்களில் நீர்ததும்பப் பெருமூச்செறிந்துகொண்டு, 'நான் என்னென்று சொல்வேன், வெட்கமாயிருக்கின்றதே; நீதான் படத்தில் எழுதிய உருவத்தால் அறிந்துகொண்டையே; இனி நான் வேறு கூறவேண்டுமோ' என்றாள். அதுகேட்ட தோழி: 'அம்மா! நீ அஞ்சாதே; வாடாதே. உன் கருத்தைக் கடவுள் நிறைவேற்றுவார்' என்று இப்படி சமாதானஞ் சொல்லிக்கொண்டு அவள் படும் துன்பத்திற்குத் தணிவாய் உபசாரஞ்செய்துவந்தாள்.

இது இப்படியிருக்க, அரமனையிலிருந்த ஒரு குரங்கு கட்டுவிடுபட்டு அந்தச் சங்கிலியை இழுத்துக்கொண்டே குதிரைச்சாலையிற் பிரவேசித்தது. அதனை அச்சாலையிலுள்ளோர் பின்தொடர்ந்து பிடிக்கப்போனார்கள். அவ்வரவம் செவிப்படவே, அப்பெண்கள் இருவரும் பயந்து திரும்பிப்பார்க்கையில், அக்குரங்கு எதிராகவரக்கண்டு பயந்தோடி மறைவில் ஒளித்து நின்றார்கள். அப்போது சாகரிகை சுசங்கதையை நோக்கி: "சித்திரப்பலகையை எங்கே வைத்தாய்? பிறர் யாராவது பார்ப்பார்களே" என்று சொல்ல, அவள்: அடிபேதாய்! சித்திரப்பலகையைப்பற்றி விசாரப்படுகிறாய்? அதோ பார்; அந்தக் குரங்கு சாரிகையின் கூட்டைத் திறந்துவிட அப்பறவை வானத்திற்

பறந்துபோகின்றது. அதனை எப்படியாகிலும் பிடிக்க வேண்டுமே; எழுந்துவா போவோமென்றனள். அது கேட்டு ராஜபுத்திரி எழுந்திருக்க, இருவரும் அந்தப் பக்ஷியை நாடி வேறோரிடஞ் சென்றார்கள்.

இவர்கள் செய்தி இவ்வாறிருந்தது. ஸ்ரீபருவதத்திலிருந்து வந்த ஸ்ரீ கீர்த்திதாசன் அல்லது ஸ்ரீகண்டதாசன் என்பவனிடத்தில் வச்சராஜன் ஒரு *தோகதவித்தையைக் கற்று அதைப் பரீக்ஷைசெய்யும்பொருட்டுத் தோட்டத்தில் தான் நட்ட †நவமாலிகைக்கொடிக்குப் பிரயோகித்தான். பிரயோகிக்கவே அது அக்காலத்தில் அளவின்றிப் பூக்கத் தலைப்பட்டது. வசந்தகன் அதைக் கண்டு ஆச்சரியத்தோடு அரசனிடம் வந்து: "நேசனே! கீர்த்திதாசனுடைய மகிமையை என்ன சொல்லுவேன். அவன் பிரயோகத்தினால் உம்முடைய நவமாலிகைக்கொடி இக்காலத்திலும் பூங்கொத்துக்கள் நிரம்பி ராணியாருடைய மல்லிகைக் கொடியைச் சிரிக்கின்றதுபோல் இருக்கின்றது, பார்ப்போம் வாரும்" என்றழைத்தான். அரசனோ: தான் தேவியின் செடிக்கு அங்ஙனஞ் செய்வியாமையைப் பற்றி அவளுக்குக் கோபமுண்டாயிருக்கும்; ஆதலால் அதனைத் தான் பார்க்கப்போவது தகுதியல்லவென்று நினைத்திருந்தான். ஆயினும், தோழன் அழைப்பதனாலும், அதைக் காணவேண்டுமென்ற அவாவின் மிகுதியாலும் அங்குச் சென்றான். சென்றபோது, வசந்தகன் அங்கே ஒரு சத்தங்கேட்டு அச்சமுற்று, அரசனை நோக்கி: "இதோ எனுமிச்சங்கிளைமீது எதுவோ மனி

---

* தோகதவித்தை, செடிகள் நன்றாய்ப் பூக்கவும் காய்க்கவும் எரு இடுவதைக்குறித்த சாஸ்திரம்.

† நவமாலிகை, சாதிமல்லிகை.

நப்பேச்சாய்ப் பேசுகின்றது" என்று சொல்ல, வேந்தன் அம்மரத்தின் எதிர்ப்புறம் வந்து உற்றுநோக்கி: "ஓகோ! இது நாகணவாய்ப்புள்; இந்தப் பறவை மிகு மதுரமாகவும் நன்றாகவும் பேசுகின்றது; யாரதோ தெரியவில்லை என, வசந்தகன்: யாரதானால் என்ன? அடித்துத் துரத்திவிடுகிறேனென்று கையில் ஓர் கொம்பை எடுத்தான். அதைக்கண்டு ராஜா: அடா மூடா! செவிக்கு இன்பமூட்டும் இதனைத் துரத்தாதே; என்ன சொல்லுகிறது அதனைக் கேட்போமென்றான். இப்படி இவ்விருவரும் கேட்பதற்கு நிற்கையில், அந்தப் பக்ஷி முன் சாகரிகையும் சுசங்கதையும் சம்பாஷித்ததைச் சரியாகச் சொல்லிற்று. அதைச் செவியுற்று விதூஷகன்: இதென்ன, பொருத்தமில்லாப் பேச்சாயிருக்கின்றதென்ன, அரசன்: அப்படியல்ல; எவளோ ஒருத்தி ஒருவன்மேற் காதலுற்று அவனைச் சித்திரித்துப் பார்த்துக்கொண்டிருக்க, தன் தோழி இதென்னவென வினவியதற்கு மன்மதன் என்று சொல்ல, அத்தோழியானவள், அவனைப் பக்கத்தில் சித்திரித்து ரதிதேவியென்று மறைத்துச்சொல்ல நடந்த சம்பாஷணைபோலிருக்கின்றது. பொறு, இன்னம் என்னசொல்லுகிறது கேட்போமென்றான். அப்போது அந்தச் சாகரிகை: "என் உயிர்த்தோழி! நீ மனஞ்சோராதே; இத்தன்மையான கன்னிகாரத்தினத்திற்குக் கடவுள் அமைப்பு தக்கதாயே இருக்கும்" என்றது. தோழன்: "அரச! கேட்டையா இது உரைத்ததை; எதுவோ உன்னிடத்து விசேஷமிருக்கின்றது" என, அரசன்: அப்பா! நான் எங்கேயோ பராக்காயிருந்தேன்; நான் கேட்டிலேன் என்ன, வசந்தகன்: பறவை சொன்னதைச்சொல்ல, அதை அரசன் கேட்டு: "இது அந்தப் பெண்படும் விரக

தாபத்தைக்குறித்துத் தோழி சொல்வது; இதனால் அவள் அழகுமுதலிய பாக்கியங்கள் பெற்ற பெண் மணி" என்று தெரிகிறது. இன்னும் சொல்வதைக் கேட்போம் என்றிருக்க, அந்தப் புள்: "ஆசையோ கிடைக்கமாட்டாதவன்மேல், நாணமோ பெரிது; ஆத் துமாவோ பாவசம், தோழி! நமது ஆசை பொருந்தாத தாயிருக்கின்றது; இப்போது மாணமே நமக்குச் சாண மானது, பாாதீனமாயிருத்தல் தகுதியன்று" என்கிற கருத்துள்ள,

"விருப்போ பெறற்கரியான் மேலது நாணோ
பருப்பதமென்னப் பெரிதாம்—உரைப்பின்
உடலும் பரவசமிங்குற் றதியாக்கை
விடலே சகியன்று வேறு"

என்னும் பாடலைப் பாடியது. அதைக்கேட்டு அந்த விதூஷகன்: ஓய் அரசனே! இப்பறவை நான்கு மறை களையும் ஓதிய பார்ப்பானைப்போலே ஒரு இருக்கை ஓதுகின்றது என்று சொல்ல, அரசன் புன்னகைகொ ண்டு, தோழ! இப்படிப்பட்ட இருக்குகளை அறிய உன்னைப்போல் எந்தப் பிராமணன் இருக்கிறான் என்று பரிகாசம்பண்ணினான். அதற்கு அவன்: இது இருக்கு அல்லாதேபோனால் மற்றென்னவென்று சொல்ல, ராஜா: பேதாய்! இது பாட்டென்றான்; அப் படியா பாட்டா! ஆனால் அதில் என்ன சொல்லியிருக் கிறது சொல் என்று வசந்தகன் வினவ, மன்னவன்: யாரோ ஒரு பருவம்வந்த சுந்தரி தான் காதலித்த புரு ஷனைப் பெறாமல் உயிரை அலக்ஷியஞ்செய்து சொன் னது என்று உரைக்கக்கேட்டு, அவன்: உரத்த சத்த மாய் நகைத்து, என்ன இந்தக் கோணற்பேச்சு, 'என் னைப் பெறாமல்' என்று நேராகப்பேசு; இல்லாவிட் டால் ஒரு பேதை எவனை எழுதி 'மன்மதன்' என்று

மறைக்கக்கூடும் என்று கைதட்டிச் சிரித்தான். அதைக் கேட்டு அந்தப் பறவை ஓடிப்போயிற்று. அதைக் கண்டு அரசன்: அடா மூர்க்க! உன் அட்டகாசத்தினால், அந்தப் பறவை பறந்துபோயிற்றே! இன்னம் எதுவோ இன்பமாய்க் கேட்கலாமே, கெடுத்தையே என்று வெறுக்க, அவன் நாற்புறமும் உற்றுப்பார்த்து: அரசனே! துயரப்படாதேயும், அது வேறெங்கும் போகவில்லை. கதளீகிருகத்தண்டைதான் போயிற்று; அங்கே போவோம் வாரும் என்ன, இருவரும் எழுந்து அவ்விடம் அடைந்தார்கள்.

அங்கு அப்பறவை காணப்படாமையின் வசந்தகன்: அந்தப் பறவையைத் தேடிப் பயனென்ன? இந்தத் திண்ணை மழமழவென்று நன்றாயிருக்கிறது; இதன் மீது உட்கார்ந்து குளிர்ந்த காற்றின் சுகத்தைக் கிஞ்சித்து அனுபவிப்போம் என்ன, அரசனும் அங்கீகரித்ததனால், இருவரும் அத்திண்ணைமீது உட்கார்ந்தார்கள்.

அவ்வளவில் வசந்தகன் அங்கே சிறிதுதூரத்தில் ஒரு பறவைக் கூட்டைக்கண்டு இது அந்தப் பக்ஷியின் கூடாயிருக்கலாமென்று அதை எடுக்கப்போகையில், சித்திரப்பலகை அகப்பட்டதனால் அதை எடுத்துப் பார்த்துச் சந்தோஷமாய் அரசனிடம் ஓடிவந்து, தோழ தோழ! இதில் நான் முன் சொல்லியபடி உன் உருவந்தான் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது என்றான். அரசனும் களிப்போடு தலைவணங்கிக்கொண்டே "எதோ கொடு பார்ப்போம்" என்று கைநீட்ட வசந்தகன்: இதில் ஒரு கன்னிகையும் எழுதப்பட்டிருக்கின்றதனால் இதைச் சும்மாக்கொடேன், எனக்கு வெகுமதியளித்தையாயின் கொடுப்பேன் என்றனன். அதற்கு

ராஜா: "நல்லதப்பா, வெகுமதிக்கென்ன குறை, நானே உனக்கு வெகுமதி" என்று சொல்லி, அப்பலகையை வலுவிற் பிடுங்கிக்கொண்டு அதிலிருந்த பெண் உருவத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டு விதூஷகனோடு, தோழ! பார், இத்தன்மையான படைப்பு எங்குமில்லை. அழகையும் காந்தியையுமே எடுத்து உருவாக்கினாற் போல் இருக்கின்றது. இவளைச் சிருஷ்டித்த நான்முகக்கடவுளும் ஆச்சரியப்பட்டிருப்பார் என நினைக்கிறேன் என்று இப்படி வர்ணித்து நிற்கையில், 'ஏன் இவள் வாடின முகத்தோடு தலைகுனிந்த பாவனையாய் எழுதப்பட்டிருக்கிறாள்' என்று விதூஷகன் வினவ, இதற்கெல்லாம் காரணம் பறவையின் பேச்சினாலேயே அறிந்திருக்கிறோமே, என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

இத்தருணத்தில் சாகரிகையும் சுசங்கதையும் பறவையைத் தேடி அது அகப்படாமையின், சித்திரப் பலகையை எடுத்துக்கொண்டுபோகலாம் என்று அவ்விடம் வந்து, இவர்களுடைய பேச்சரவத்தைக் கேட்டு வாழைமர மறைவில் நின்றுகொண்டிருக்க, 'பறவைப் பேச்சினால் எல்லாம் அறிந்திருக்கிறோமே' என்று அரசன் சொன்னதைக்கேட்டு, தோழியான சுசங்கதை, 'பார்த்தையா, நான் சொன்னபடியே அந்தப் பக்ஷி தன் திறமையைக் காட்டிவிட்டது' என்று ராஜகுமாரத்தியோடு சொல்லி, மேலும் 'அங்கே மகாராஜா சித்திரப் பெண்ணின் வடிவில் தன் கண் செல்லுகிறவகையை வர்ணித்துச் சொல்லுகிறதையும் கேட்டாயா?' என்றாள். அதற்கு ராஜகன்னிகை கிஞ்சித்து முகம் திருப்பி, 'நீதானே கேள், நீ எழுதின திறமையல்லவோ வர்ணிக்கப்படுகின்றது' என்றாள்.

இவர்கள் இப்படியிருக்க வசந்தகன் அரசனை நோக்கி: என் நேசனே! நீ இக்கன்னிவடிவையே பார்த்துக்கொண்டிருக்கிறாயே, அந்தக் கன்னிகை எதன்மேல் விருப்பமுற்றுச் சித்திரமெழுதினாளோ, அந்த உன் உருவத்தை ஏன் சற்றேனும் பார்க்கவில்லையென்று சொல்ல, ராஜாவும்: அப்பா! நீ சொல்லுகிறபடி அத்தன்மையானவள் விருப்பத்தோடு எழுதினதற்காக என் உருவத்தையும் பார்க்கவேண்டுவதுதான் என்று பார்த்து, தோழ! அவள் எழுதும்போது கண்ணீர் சிந்தியிருக்கின்றது பார் என்று வேட்கை விஞ்சிப் பதைத்துக்கொண்டிருந்தான். அவ்வளவில், முன்பு சாகரிகையின் விரகதாபம் சாந்தமாகும்பொருட்டு சுசங்கதை கொணர்ந்துபோட்ட தாமரைத்தளிர்களும், அதன் அடித்தாள்களும் அங்கே கிடந்தவைகளைத் தோழன் கொணர்ந்துகொடுக்க, அரசன் அவைகளை வாங்கித் தன்மேல் அணிந்துகொண்டு, அவை அவளுறுப்புகள் பட்டு நிற்கும் விதங்களை வர்ணித்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, சுசங்கதையானவள்: நம்முடைய மகாராஜா காதல்விஞ்சியிருக்கிறார், இனி உபேக்ஷிக்கவொண்ணாது, என்று மனதில் எண்ணி, சாகரிகையை நோக்கி: தோழி! நீ இங்குக் கருதிவந்தபொருள் எதிரிலேயே இருக்கின்றது; கைக்கொள் என, அந்தக் கன்னிகாமணி புருவநெறித்து முகங்கோட்டி, நான் 'எது கருதி இங்கேவந்தேன்' என்று படபடத்து உரைத்து அப்புறஞ்செல்ல இரண்டடிவைத்தாள். அதற்குப் பாங்கி: என்னடி, நீ எதைச்சொன்னாலும் கோபிக்கிறாய், பலகையைத் தேடினாயே அது எதிரிலிருக்கிறதென்றேன்; நீ ஏதோ வேறு கருத்துக்கொண்டாய்;

நல்லது, நானே போய் அதைக் கொண்டுவருகிறேன்; சிறிதுநேரம் இங்கேயே இரு என்று அவனை நிறுத்தித் தான் கதளீகிருகஞ்சென்றாள். இவள் வருவதை வசந்தகன் அறிந்து, 'அப்பா! தேவியின் பரிசாரிகை வருகிறாள்; சித்திரப்பலகையை மறைத்துக்கொள்' என அரசனும் அங்ஙனமே செய்தான். போன பரிசாரிகை அரசன் எதிரிலேபோய் கும்பிட்டுநிற்க, அரசன்: ஓகோ! சுசங்கதாய்! வா உட்கார்; எதிங்கே வந்தது? நான் இங்கிருப்பதெப்படி உனக்குத் தெரிந்தது? என்று சொல்லக்கேட்டு, அவள்: 'தாங்கள் இருப்பதுமாத்திரமேயல்ல, சித்திரப்பலகை வைத்திருப்பதும் அதைப் பற்றிப் பேசியபேச்சும் யாவுந்தெரியும், நல்லது எனக்கு விடைகொடுங்கள்; தேவியாரிடம் சென்று இதையெல்லாம் தெரிவிக்கவேண்டும்' என்றனள். அப்போது வசந்தகன்: இவள் சொல்வது சரியே; ராணியாரிடத்தில் எல்லாவற்றையும் தெரிவிப்பாள். ஆதலால் இவளைச் சந்தோஷப்படுத்தி அனுப்புவது நலமென்று அரசனோடு ரகசியமாகச்சொல்ல, அந்தப்பிரபுவும் சரிதானென்று அங்கீகரித்துத் தன் காதணியைக் கழற்றி அவளுக்குக் கொடுத்து, பெண்ணே! இதுவெல்லாம் வேடிக்கைக்குச் சும்மாப் பேசியது, ஒன்றும் யதார்த்தமன்று, இதைப் போய்ச் சொல்லித் தேவிக்கேன் வீண் மனக்கலக்கம் உண்டாக்குகிறாய்? அப்படிச் செய்யாதே என்றான். அதற்கு அந்தப் பரிசாரிகை புன்சிரிப்புக்கொண்டு ராஜாவைக் கும்பிட்டு, சுவாமி! இந்த அணி எனக்கேன்? தங்கள் அனுக்கிரகம் ஒன்றே போதும். தாங்கள் என்னிடம் வைத்திருக்கும் வாச்சல்யத்தைப்பற்றி இப்படிச் சும்மாச்சொன்னேன். இதோ இந்தச் சித்திரப்பலகையில் எழுதப்பட்டிருக்கின்றவள் என் தோழி சாக

ரிகையென்பவள். அவள்: என்னுருவத்தைப் பலகை மேல் ஏன் எழுதினுயென்று என்மேல் கோபிக்கிருள். தாங்கள் வந்து அவளைச் சமாதானப்படுத்தும்படி வேண்டுகிறேனென்றனள். அதற்கு வச்சராஜன்: பெண்ணே! சந்தோஷம், அப்படியே செய்கிறேன்; எங்கே உன் தோழி? காட்டு என்ன, அவள்: இதோ வாழைப் புதரண்டை நிற்கின்ருளெனக் காண்பித்தாள். விதூஷகனும் இன்னொரு தருணத்தில் இச்சித்திரப்பலகை எதற்காகிலும் உபயோகமாகுமென்று அதனைக் கையி லெடுத்துக்கொண்டு புறப்பட, இம்மூவரும் சாகரிகை இருக்குமிடத்திற்குப் போனார்கள். போன போது அந்த ராஜகுமாரிகை அச்சமும் நாணமும் களிப்பும் கலந்த நெஞ்சினளாய், இதுதானே நீ பலகைகொண்டுவருகிறேனென்று போனகாரியமென்று சிறிது கோபித்தாற்போல் தோழியோடு சொல்லி அப்புறம்போக எத்தனப்பட்டாள். அதுகண்டு சுசங்கதை அரசனை நோக்கி: மகாப்பிரபுவே! இவள் மிகு கோவக்காரி! ஆதலின் நீர் இவளைக் கைப்பிடித்து நிறுத்தவேண்டும் என்று உரைக்க, ராஜா: பழம் நழுவிப் பாலில்விழுந்த தொப்பப் போாநந்தத்தோடு அவள் கையைப்பிடித்து அந்தப் பரிசத்தாலுண்டான சுகவெள்ளத்திலமிழ்ந்து போய்க் கிஞ்சித்துத் திடப்படுத்திக்கொண்டுநின்று, 'பெண்கள் திலகமே! தோழிமாரிடத்து இங்ஙனம் கோபிக்கலாமா?' என்று இளக்ஷமான சொற்களால் சமாதானம் சொல்லிக்கொண்டே இருந்தான். அப்போது சாகரிகை புருவநெறித்து, 'இனியாகிலும் நீசும்மா இருக்கமாட்டையா' என்று தோழியைநோக்கிச் சில கடுமையான சொற்களைச் சொன்னாள். அதற்கு அத்தோழி: என்னடி உனக்குச் சற்றேனும் சாசகுணம் இல்லை.

மகாராஜா அவர்கள் கைப்பிடித்துச் சமாதானம் சொல்லியும் நீ இளகாமல் மூர்க்கமாயே பேசுகிறாய்? இது உனக்குத் தகாது என்று உரைத்துக்கொண்டிருக்கையில், விதூஷகன்: 'இவள் பசித்தபார்ப்பான்போல் கோபிக்கிறாள்' என்றுசொல்லி, குணவொப்புமையைக் கொண்டு ஓகோ! 'வாசவதத்தை இங்கு வந்தாள்போல் இருக்கிறதே' என்றான். இதைக்கேட்கவே வாசவதத்தை வந்துவிட்டதாய் அவன் சொன்னான் என்று நினைத்து யாவரும் பயப்பட்டார்கள். அரசனோ சாகரிகையின் கையை விட்டுவிட்டான். அப்பெண்களிருவரும் வாழைத்தோட்டத்துட்புகுந்து அப்புறஞ்சென்றார்கள். ராஜர் திரும்பிப்பார்த்து: 'எங்கே வாசவதத்தை?' என்று வினவ, வசந்தகன்: வாசவதத்தை எங்கே வந்தாள்; சாகரிகை, கோபத்தில் வாசவதத்தையாய் இருக்கிறாள் என்று சொன்னேனெனவே, அரசன்: அடா மூர்க்க! தப்புப்பேச்சுப்பேசிக் கையில் அகப்பட்டபொருளை நழுவிவிடச்செய்தையே; இனி அவளை நான் எங்கே காண்பேன் என்று அனுதாபப்பட்டுக் கொண்டு இருந்தான்.

இப்படியிருக்கையில் ராணியானவள்: ஸ்ரீ கீர்த்திதாசனிடத்துக் கற்றவித்தையால் அரசன் தனது நவமாலிகைக்கொடியை அகாலத்தில் பூக்கச்செய்த செய்திகேட்டு, அதைக்காண விருப்பங்கொண்டு தன் பரிசாரிகையாகிய காஞ்சனமாலையோடு அவ்விடம்வந்து அங்கே கேட்ட மிடற்றோசையால் அரசன் வந்திருப்பதை யறிந்து அவனுக்கெதிரில் போய் நின்றாள். விதூஷகன் அப்போது அந்தச் சித்திரப்பலகையை எடுத்துக் கக்கத்தில்வைத்து உத்தரியத்தால் மறைத்துக்கொண்டான். ராஜா தேவியைநோக்கி: நான் முன்னமேவந்தும் நீ

வராமலிருந்ததனால் நவமாலிகையைப் பார்க்கவில்லை. இனிப் போய்ப் பார்ப்போம் வாவென்று அழைக்க, தேவியானவள்: போகவேண்டுவதில்லை. ஆரியருடைய முகமலர்ச்சியாலேயே அது பூத்திருக்கின்றதெனத் தெரிகின்றது என்று அங்கேயே உட்கார்ந்துகொண்டாள். உட்காரவே தேவி கோபமின்றி உட்கார்ந்தனளென்கிற சந்தோஷத்தினாலே வசந்தகன் கைகளைவிரித்து ஆடினான். அதனால் சித்திரப்பலகை கீழேவிழுந்தது; அதைக்குறித்து எடுத்து மறைத்துக்கொள்ளும்படி அரசன் விதூஷகனை எச்சரிப்பதற்குள்ளே காஞ்சனமாலை ஓடிவந்து அதை எடுத்துத் தேவிக்குக் காட்டினாள். அவள் பார்த்துத் தன் கணவனை அதென்னவென்று கேட்க அவனொன்றும் தோன்றாமல் தோழனை விரலால் தூண்ட, அந்த வசந்தகன்: தேவியாரே! கேளும், தன் ரூபத்தைத் தான் எழுதுவது கூடாதகாரியமென்று எங்களிருவர்க்கும் வாதம்வந்தபோது நான் எழுதுகிறேன் என்று மகாராஜா தன் ரூபத்தை இதில் எழுதினார் என்றான். அரசனும்: ஆம், அதப்படிதான் என்றான். ராணி: இருக்கட்டும், இந்தப் பெண்ணுருவம் என்ன? வசந்தகனுடைய சிற்பத்திறமோ என்று இகழ்ச்சியாய்க் கேட்க, தேவியாரே! அங்ஙனமன்று; இவ்வகையாய் ஒரு பெண்வடிவமிருக்கலாம் என்று புத்தியால் குறித்துச் சித்திரித்ததேயன்றி ஒருத்தியை நோக்கி எழுதியதன்று. நீ வீணாய்ச் சந்தேகப்படாதே என்று உதயனன் உரைத்தான். அப்போது விதூஷகன்: ஆம், இது நிஜம்; என் பூணூல்மேலாணை. இதுவரையில் இப்படிப்பட்ட ஒருத்தியை நாங்கள் கண்டதில்லை என்றான். அதுகேட்டுக் காஞ்சனமாலை தேவியோடு ரகசியமாய், புழுவூர்ந்த எழுத்துப்போலே இது இப்படிச் சம்பவித்திருந்தாலும்

இருக்கலாம் என்ன, தேவி: அடிபோடி, இந்த விதூஷகன் கோணற்பேச்சை நீ என்னகண்டாயென்று ஏகாந்தமாயே சொல்லிவிட்டு, பர்த்தாவை நோக்கி: ஐய! இந்தச் சித்திரப்பலகையைப் பார்த்ததனால் எனக்குத் தலைநோயுண்டாயிற்று; நான் போகிறேன் என்று எழுந்து போகையில் பூபாலன், அவள் முன்றானையைப் பற்றியிழுத்து, என் கண்ணே! நீ வேறு நினைத்துக்கொண்டு போகிறாய், வேண்டாம் வா, உன்னோடு இத்தோட்டத்து விநோதங்களைக் கண்டுகளிக்க வெகுநேரமாகக் காத்திருக்கிறேனே என்றிப்படி ஆசையூட்டும் சொற்களைச் சொல்லித் திருப்பியும் அவள், எனக்குத் தலைநோகின்றது, நான் இரேன் என்று, சேடியோடுகூடச் சரேலென்று அந்தப்புரத்துக்குப் போய்விட்டாள்.

பின்பு விதூஷகன் அரசனைநோக்கி: தோழ! இன்றைய ஆபத்துத் தப்பிவிட்டதல்லவா? என்ன, அரசன்: அடமூட! என்ன தப்பிற்று? அவள் மேன்மக்கள் வீட்டுப்பெண்ணாகையால் எதிரே பதறி ஒன்றும் வெளியிடாமல் நம்மிடத்து மிகுந்த கோவத்தோடு போயிருக்கிறாள்; ஆதலால் நாம் அவ்விடம் சென்று அவளைச் சமாதானப்படுத்தவேண்டும்; அங்கே போவோம் வாவென்று தோழனோடுகூட ராணியிடஞ்சென்று, அங்கே அவளோடு சிலநேரம் கொஞ்சிக்குலாவிச் சில நற்பேச்சுகள் பேசிச் சமாதானப்படுத்தினபின்பு, தனக்குண்டான காமநோயை மறைக்கும்படி உடம்பு சொஸ்தமில்லையென்று ஒரு சாக்கிட்டுத் துன்பப்பட்டுக்கொண்டு, சாகரிகையிடஞ்சென்று செய்தி தெரிந்துவரும்படி வசந்தகனை அனுப்பிவிட்டு, அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அரமனை வாயிலின் மேன்மெத்தையில் உட்காந்திருந்தான்.

ராணி, சித்திரம்பார்த்ததனால் சாகரிகைமேல் அரசற்கு விருப்பமுண்டென்பதை அறிந்து, எந்தவேளையெப்படியாகுமோவென்று, சுசங்கதைக்குத் தன் அணிகளையளித்து, நம் ஐயருக்கும் சாகரிகைக்கும் சேர்க்கை இல்லாவிதம் நீ செய்யவேண்டுமென்று பணித்து, தன் கணவற்குத் தேஹாநுகூலம் எப்படியென்று அறிந்துவரும்படி காஞ்சனமாலையை அனுப்பி, அவள் வரத் தாமதித்ததனால் மதனிகையென்பவளையும் அவ்விடத்துக்குப் போகச்செய்தாள். ராஜாவினால் அனுப்பப்பட்ட வசந்தகன் சித்திரசாலையண்டைபோய்ச் சுசங்கதையைக் கண்டு, இப்போது நம் அரசனுக்கு நோயுண்டாகக் காரணம் சாகரிகையேயன்றி வேறன்று; ஆதலால் அதற்குச் செய்யவேண்டுவதை நீதான் செய்யவேண்டுமென்று சொல்ல, அவள்: நல்லது; ராணி அரசனிடம் சாகரிகையைப் போகாமலிருக்கச் செய்யும்படி எனக்குத் தன் ஆபரணங்களை வெகுமதி கொடுத்தாள்; அவைகளைக்கொண்டு சாகரிகைக்குத் தேவிவேடம் போட்டு இட்டுக்கொண்டு யான் காஞ்சனமாலைவேடம் பூண்டுவருகிறேன்; நீ இங்கேயே காத்திரு; மாதவிக் கொடிமண்டபத்தண்டை இருவரும் கூடலாம் என்று சொல்லினாள். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்க, காஞ்சனமாலை அரசனிடஞ்சென்று தேகசவுக்கியம் விசாரித்துத் திரும்பிவருகையில், அப்பேச்சை மறைவிலிருந்து செவியுற்று, வழியில் வந்துகொண்டிருந்த மதனிகையையும் கூட்டிக்கொண்டு வாசவதத்தையிடம் சேர்ந்து தான் கேட்ட செய்திகளைச் சொல்லிவிட்டாள்.

வசந்தகன் தான் வந்தகாரியம் அனுகூலப்பட்டதென்று உல்லாசமாய்க் குதித்துக்கொண்டே அரசனிடம்

போய்க்கொண்டிருக்கையில் அரசன்: காமநோயால் தனக்குண்டாயிருக்கிற வருத்தம் எப்படியானாலும் ஆகட்டும், தேவியின் கோபத்தால் சாகரிகைக்கு என்ன தீங்கு நேரிட்டதோ என்று மிகவும் மனக்கலக்கமுற்றிருந்தான். இந்நிலையிலிருந்த ராஜாவண்டைவந்து விதூஷகன் கையெடுத்து, மகாராஜாவே! உமக்கு ஜயம் ஜயம், காரியசித்தி சமீபித்திருக்கிறதென்றான். அது கேட்டுப் பூபாலன் உவப்புற்று, நீ சாதிக்கமாட்டாத காரியமும் உண்டா? இருக்கட்டும், காரியம் அனுகூலித்தவிதம் என்னவென்று கேட்க, அவனும் இப்படியாயிருக்கிறதென்று செவியிற்சொன்னான். அதைக் கேட்டமாத்திரத்தில் அரசன் ஆனந்தம் அடைந்து, தன் கையிலிருந்த மணிக்கடகத்தை அவனுக்குக் கொடுக்க, அவன் அதை வாங்கித் தன் கையில் அணிந்துகொண்டு கையைத் திருப்பித்திருப்பிப்பார்த்து: ஓய் மகாராஜாவே! என் கை எத்தனை அழகாயிருக்கிறது பாரும், இதை என் மனைவிக்குக் காட்டிவருகிறேன் என்று தன் மாளிகைக்குப் போகப் புறப்படுகையில், அரசன் சிரித்து அவனைக் கைப்பிடித்துத் தடுத்து, அடா! சற்றுநேரங் கழித்துப்போய் இதை உன் இல்லாளுக்குக் காட்டலாம்; இப்போ பொழுதென்ன இருக்கிறது பார் என்றனன். விதூஷகனும் வானத்தைநோக்கி: ஓ மகாராஜாவே! சூரியமண்டலம் சிவந்துபோயிற்று, நன்றாய்ப் பாரும் என்றுரைக்க, அரசனும் அதனைப்பார்த்துச் சிறிது வர்ணித்து, நல்லதப்பா! நாம் எழுந்து மாதவிமண்டபத்தண்டை போவோம், அங்கல்லவோ நம் ஆசைக்கண்ணாட்டி வருவாள் என்ன, விதூஷகன் உடன்பட்டு எழுந்து திசைகளை இருள் கவ்விவருவதைக் காட்ட, அதையும் அரசன் சிறிது வர்ணனைசெய்து இனிப்

போவோம் வாவென்கையில், வசந்தகன்: இவ்வந்தகாரத்தில் அந்தப் பந்தலுக்கு வழி நாம் எப்படி காண்போம் என்று மயங்கிநின்றான். வேந்தன்: என்னடா! எத்தனையோநாள் பழகினவிடத்தில் வழிகாண்பது அரிதா? நான் காட்டுகிறேன் என்று பேசிக்கொண்டே அந்தக் கொடிமண்டபத்தைக் கிட்டினான். அங்குச் சென்றபிறகு, வசந்தகன் அரசனைநோக்கி: நேசனே! நீ இங்கேதானேயிரு, நான் போய்ச் சாகரிகையை இட்டுக்கொண்டுவருகிறேன் என்று சொல்லிப்போனான். போனவன் சிறிதுநேரம் விளம்பமாயிருக்க மகாராஜா, தோழன் ஏன் இன்னம் வரவில்லை, ஒருவேளை இவன் செய்த முயற்சி வாசவதத்தைக்குத் தெரிந்துவிட்டதோ என்று ஐயுற்றுச் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

இவர்கள் இவ்வாறிருக்க, வாசவதத்தை காஞ்சனமாலையைநோக்கி: பெண்ணே! நீ சொல்லுவது உண்மையா? சாகரிகை என் வேடம் பூண்டு ஐயரிடம்போக இருக்கிறாளா? என வினவ, அவள்: அம்மா! நான் சொன்னதில் நம்பிக்கையில்லையானால் சித்திரசாலையிடம் போவோம் வாரும்; அங்கே வசந்தகனைக் கண்டீராயின் என் பேச்சை நம்பும் என்ன, அங்ஙனமே செய்யத்தக்கதென்று ராணி காஞ்சனமாலையோடு சித்திரச்சாலைக்குப் போயினள். அங்கே காஞ்சனமாலை விரலைநொடிக்க, வசந்தகன் அவளருகிற்சென்று, அவள் வேடம்பூண்ட சுசங்கதையென்றே நினைத்து: 'சுசங்கதாய்! நீ தரித்த காஞ்சனமாலைவேடம் உனக்கு ஏற்றிருக்கின்றது; சாகரிகை எங்கே' என, அவளும் விரலாலே சுட்டிக்காட்ட, ஓகோ! நேரான வாசவதத்தையாகவே இருக்கிறாள் என்று சொல்லக்கேட்டு, தேவி இவன் நம்மை அறிந்துகொண்டானோ என்னவோவென்று ஐயுற்று நிற்கையில், விது

ஷகன் சிட்டிக்கைபோட்டு, சாகரிகாய்! இப்படி வா என்னவே, ஐயந்தெளிந்து புன்சிரிப்போடு சேடியின் முகநோக்க, அவளும் சுட்டுவிரலை நிமிர்த்து இப்படியெல்லாம் செய்கிறாய் நல்லது ஆகட்டும் என்று வெருட்டினாள். அது காதிற்படாமலே அவன் சாகரிகாய் கடியவா என்று சொல்லிச் சென்றுகொண்டே இருந்தான். அரசன்: இதென்ன? சாகரிகை வருவாளென்று நிச்சயமிருக்கையில் முன்னிலும் அதிகமாய்த் தாபம் மனதை வருத்துகின்றது! இதுவும் சரிதான்; மழைக் காலத்துப் பகல் மழை பெய்ய வருகையிலேதான் அதிக வெப்பத்தைத் தருகின்றது என்று இப்படி எண்ணிச் சமாதானப்பட்டும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்டு விதூஷகன், திரும்பித் தன் பின்வருகிறவளைப் பார்த்து: நம்மரசர் உருக்கத்தோடு உன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்; நான் சற்று முந்திச்சென்று நீ வருவதைத் தெரிவிக்கிறேன் என்று விரைவாய்ப் போய், 'இதோ சாகரிகை வந்துவிட்டாள்' என்று ராஜாவுடன் சொன்னான். சொல்லவே, அரசன் திடீரென்று எழுந்து எதோ எதோ என்று ஆவலோடு பார்க்கையில் அவளும் வந்துநிற்க, அரசன் அவள் கையைப்பிடித்துக் கொண்டு: என் காதலியான சாகரிகாய்! உன் உறுப்புகளெல்லாம் மிகக் குளிர்ச்சியானவை; ஆதலால் என்னைத் தழுவி என் தாபத்தைத் தீர்க்கவேண்டுமென்று கெஞ்சித்து வர்ணனைசெய்து புகழ்ந்து வேண்டினான். அரசி அதுகேட்டுத் தன் தோழியோடு, 'இப்படிச் சிந்தித்திருக்கிற நம்மையர் மறுத்தும் என்னோடு பேசுவார் என்பது எனக்குத் தோன்றவில்லை' என்று ரகசியமாகச் சொன்னாள். அதற்கு அப்பாங்கி: சாகசக்காரர் எதுதான் செய்யார்கள் என்றாள். இவ்வளவில் விதூஷ

கன் சாகரிகாய்! வாசவதத்தையின் கடுஞ்சொற்களாலே வெறுப்புற்றிருக்கின்ற நம்மரசருடைய காதுகளுக்கு இனிப்பாகப் பேசவேண்டுமென்ன, அதுகேட்டு வாசவதத்தை ஏகாந்தமாய்க் காஞ்சனமாலையை நோக்கி: 'நான் கடுஞ்சொற் பேசுகின்றவளாம்; இவன் வெகு இனிமையாய்ப் பேசுகின்றவனும். இருக்கட்டும்' என்றாள். இதற்குள் சந்திரன் உதயமாகவே, அரசன்: சாகரிகாய்! இந்தச் சந்திரனைப்பார், உன் முகம் போலிருக்கிறதென்று வருணித்துக் கையால் அவள் முகத்தைத் தூக்கி நோக்கி வாசவதத்தையென்றே தெளிந்து, திடுக்கிட்டுத் தோழனோடு ரகசியமாய் இதென்ன விபரீதம் விளைந்தது என்றான். அவனும் அச்சமுற்றிருந்தான். அரசன் தேவியை நோக்கி: என் காதலியே! யான் செய்த இப்பிழையைப் பொறுத்தருளவேண்டுகின்றேன் என்று சொல்ல, அவள் கண்கள் நீர்ததும்ப, 'நான் இவ்வளவுபேச்சை ஏற்கத்தக்கவளல்லேன்' என்றனள். வசந்தகனும்: அம்மா! நீ மகாநுபாவை, என் நண்பனுடைய இவ்வொரு குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுமென்றனன். தேவி: 'ஐயருடைய திருவுளத்துக்குத் தோட்டத்திலேயே இடையூறு செய்ததனால் குற்றமெனதேயன்றி ஐயருடையதன்று' எனப் பிரதியுத்தரஞ்சொல்லி, ராஜா மிகத்தாழ்ந்து வேண்டிக்கொண்டிருக்கையிலும் 'நான் வெட்கங்கெட்டவளாதலால் உட்கருத்தறிந்தும் இங்ஙனம் கோபிக்கின்றேன்' என்று சேடியோடு போகப் புறப்பட்டனள். அப்போது காஞ்சனமாலை: அம்மா! மகாராஜா அவர்கள் இவ்வளவு பணிந்து வேண்டுகையில் நீங்கள் அநுக்கிரகம் செய்யாமற்போவது சரியல்ல; பின்னிட்டுப் பச்சாத்தாபத்தை உடனே அடைவீர்கள் என்று,

சொல்லவும், உனக்குத் தெரியாது வா என்று அவளை
யும் இட்டுக்கொண்டு அந்தப்புரஞ்சேர்ந்தாள்.

பிறகு அரசன்: வாசவதத்தை கோபமாய்ப்போ
னாள், இதுவரையிலும் அவளை நான் வெகு மேன்
மையாகக் கொண்டாடி வைத்துக்கொண்டிருந்ததனால்
சந்தோஷமாயிருந்தவள், இப்போது இச்செய்கையால்
மனம் வெறுத்து உயிரை மாய்ப்பாள்; என்னசெய்
வேன் என்று விசனமாயுரைக்க, வசந்தகன்: அவள்
என்னசெய்வாளோ செய்யமாட்டாளோ தெரியாது;
சாகரிகை உயிர்விடுவாளென்பது நிச்சயம் என்றான்.
அதற்கு ராஜா: ஆம், அப்படித்தான் நடக்கும்; இத்
தருணத்தில் நாம் எதுசெய்யலாமோ அதை யோசி
என்றுரைக்கக்கேட்டு, விதூஷகன்: நாம் இப்போது
போய்த் தேவியை எப்படியாகிலும் வேண்டிக்கொண்டு
கோவந்தணியச்செய்தால் எல்லாக்காரியத்திற்கும் அநு
கூலமாயிருக்கும் என்ன, ராஜாவும் சரிதானென்று ஒப்
புக்கொண்டு தோழனோடு ராணியிடம் போகப் புறப்
பட்டான்.

இவ்வளவில் வாசவதத்தையின் வேடந்தரித்த சா
கரிகை, நமக்கும் மகாராஜா அவர்களுக்கும் நடந்த
சங்கேதங்களை அறிந்ததனாலல்லவா தேவியார் நம்மு
டைய தோழியாகிய சுசங்கதையும் என்னோடு சேரா
திருக்கும்படி கட்டளையிட்டு என்னைத் தனியாக்கி
னார்; இன்னம் என்னசெய்வாரோ? ஒன்றியாய் நா
னிருந்து அலைவதில் பயனென்ன? உயிரை விட்டுவிடுவ
தே சுகம் என்று நினைத்து, அங்கே ஒரு அசோகமரத்
தின் அடியிற் சென்று ஒரு வளிந்த கொடியைக் கழுத்
தில் மாட்டிக்கொண்டாள். அரசனோடு போய்க்கொண்
டிருந்த விதூஷகன்: இங்கென்ன, மனிதர் காலடி

யோசை கேட்கிறதென்று அங்கே போய்ப் பார்த்து, ஓகோ! முழுகிப்போய்விட்டதே, ஐயா மகாராஜாவே! தேவி உறிபோட்டுக்கொண்டு சாவவிருக்கிறாள்; வினாவில் வந்து காத்துக்கொள்ளும், காத்துக்கொள்ளும்! என்று உரக்கக் கூவினான். அது கேட்டவுடனே அரசன் மிகுந்த பரபரப்போடே எங்கே எங்கே என்று ஓடிவந்து, அவள் கழுத்திலிருந்த பாசத்தைக் கழற்றி அவள் முகத்தை ஏறப்பார்த்து, சாகரிகை என்று தெரிந்துகொண்டு, பெண்மணியே! என் ஆசைக்கண்ணாட்டி! நீயா? என் இப்படிப்பட்ட சாகசஞ்செய்யத்துணிந்தாய்? உனக்கென்ன பயம் என்று சொல்ல; அவள் ஓகோ! இதேது? இங்கே நம்முடைய பிராணநாயகன் வந்தது; இது நமது கண்ணுக்கு ஓரரும்பேறு என்று நினைத்து, அவனைப்பார்த்து: ஐயா! துர்ப்பாக்கியமுள்ள அடியாளைத் தடுக்கவேண்டாம். இத்தருணத்தில் தங்கள் தரிசனம் கிடைத்ததே போதும் என்று மறுபடியும் அந்தக் கொடியைக் கண்டத்தில் பூட்டிக்கொண்டாள். அரசனோ அதை மீளவும் வாங்கி எறிந்துவிட்டு உன் கழுத்திற்குக் கொடிவேண்டாம்; உன் கையாகிய கொடியை என் தோள்மேல் போடு என்று அவள் கையைத் தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு அந்தப் பரிசத்தின் சுகத்தில் ஆழ்ந்திருந்தான்.

முன்பு கோவங்கொண்டுபோன வாசவதத்தை அனுதாபமுற்றவளாய், காஞ்சனமாலையை நோக்கி: நம்மையர் நம்மை அவ்வளவு வணங்கி வேண்டியும் நாம் தணிந்து இணங்காமல் வந்துவிட்டோமே, அது தகுதியல்ல; ஆகையால், இப்போது நானே போய் அவனைச் சமாதானப்படுத்தி வருகிறேனென்று புறப்பட்டு, அத் தோட்டத்தின்கண் வந்து அரசன் குரற்கேட்டு அங்கே

சென்று, தன் கணவனிருக்கும் நிலையைப்பார்த்து மிக வும் கோபித்துநிற்க, ராஜன்: என் காதலியே! உன் வேடத்தினால் நீ என்றே நினைத்து இவளை ஆதரித்தேனே யல்லது வேறில்லை. நீ சோஷப்படுவது நியாயமன்று. தயைசெய்யவேண்டுமென்று சொன்னான். விதூஷக னும் ஆமம்மா! இது மெய்தான்; நீ என்றே நான் மகா ராஜாவை அழைக்க, அவரும் வந்து பிரமித்து, சாவக் கழுத்திற் கட்டிய இக்கொடியைக் களைந்தெறிந்து சமா தானப்படுத்தினார்; இதோபார் சுருக்கிட்ட கொடி, நீ கோவஞ்செய்யாதே என்றனன். அதுகேட்டுத் தேவி: காஞ்சனமாலாய்! இந்தத் துஷ்டப்பார்ப்பான் கழுத் தில் இந்தக் கொடியை மாட்டி இழுத்துக்கொண்டு, அந்தத் துஷ்டச் சிறுக்கியையும் முன்னே தள்ளிக் கொண்டு செல் என்று நியமிக்கவே, அவளும் அப்படியே வசந்தகனைக் கட்டி இழுத்துக்கொண்டு சாகரிகையையும் முன் செலுத்திக்கொண்டுபோனாள். அப்போது விதூஷகன் அரசனைத் திரும்பித் திரும் பிப்பார்த்து, ஐயா மகாராஜாவே! நான் எழைப் பார்ப்பான்; திக்கற்றவன், கழுத்திலுறியிட்டதனால் வருத்தப்படுகிறேன்; என்னை மறக்கவேண்டாம் என்று சொல்லிக்கொண்டேபோனான். சாகரிகையோ மிகுந்த துக்கமுற்றவளாய், ஐயையோ! இதென்ன துர்ப்பாக்கி யம்! சாவோமென்று முயன்றால் அதுவும் கிடைக்கவில் லையே; தெய்வம் என்னை இன்னம் எப்பாடுபடுத்த இருக் கிறதோவென்று மனதில் புலம்பிக்கொண்டும் காஞ்சன மாலையால் அதட்டப்பட்டுக்கொண்டும் சென்றாள்.

இவ்வாறு அந்நால்வரும் போம்போது, உதயன மகாராஜன், ஓகோ! என்னசெய்வேன்? தேவியின் கோபத்திற்கும், என் கண்ணாட்டியான சாகரிகையின்

துக்கத்திற்கும், தோழனான வசந்தகனுடைய சங்கடத்திற்கும் எதற்கும் நான் செய்யத்தக்க பரிஹாரம் ஒன்றுந்தோன்றவில்லையே! சும்மா இங்கேயிருப்பதில் பயனென்ன? அங்கேபோய் எப்படியாகிலும் வேண்டிக்கொண்டு தேவியின் கோபத்தைத் தணிப்பதுதான் நல்லது என்று உத்தேசித்து எழுந்து அந்தப்புரத்திற்கே போயினான்.

இது இப்படியிருக்க ராணி, சாகரிகையை உஜ்ஜயினீபுரிக்கு அனுப்பிவிட்டதாக ஒரு வதந்தி பிறப்பித்து, ஒரு நள்ளிரவில் அவளை ஓரிடத்தில் நிர்ப்பந்தப்படுத்திவைத்தாள். அவ்வளவு நிர்ப்பந்தத்திலிருக்கையிலும் அவள் எப்படியோ தன் தோழியாகிய சுசங்கதையின்வசம் தன்னிடத்திலிருந்த ரத்தினமாலையைக் கொடுத்து, இதை யார்க்காயினும் ஒரு பிராமணனுக்குத் தானஞ்செய்துவிடு என்று சொன்னாள். சுசங்கதை அதை வாங்கிக்கொண்டு பரதேசியான தன் தோழிக்கு நேரிட்ட சங்கடத்துக்காகவும், அவள் இனிப் பிழைத்திருப்பதில் ஆசையற்றிருப்பதற்காகவும் மிகுந்த விசனமுற்று அழுதுகொண்டேவருகையில், வசந்தகனைக் கண்டு: ஐயா நில்லுமென்று கூப்பிட்டாள். அவனோ கழுத்திற் சுருக்கிட்டு இழுத்துக்கொண்டு போகப்பட்டவன், அரசன் போய் வணங்கிப் பலவகையில் வேண்டிக்கொண்டதனால், கோவந்தணிந்து வாசவதத்தையால் விடப்பட்டதுமன்றி, பார்ப்பானை வருத்தினோமேயென்கிற அநுதாபத்தால் பட்டாடையும் சில ஆபரணங்களும் கொடுக்கப்பெற்று அவைகளைத் தரித்துக்கொண்டு குதூகலமாய்ப் போய்க்கொண்டிருந்தான். சுசங்கதை கூவினதைக் கேட்டுநின்று, அவளைநோக்கி: என் அழுகிறாய்? உன் தோழிக்கு என்னநேர்ந்தது

சொல் என்று வினவினன். அதற்கு அவள்: கேவிக் கேவி அழுதுகொண்டு, ஐயா என்னசொல்வேன்? தேவியர் அவளை உஜ்ஜயினிக்கு அனுப்பினதாய்ச் சொல் மாத்திரம் பிறப்பித்துப் பாதிராத்திரியில் எங்கேயோ கொண்டுபோனள்; என்னசெய்தாளோ தெரியாது. அவள் பிராணனில் நிராசையாகி இந்த மணிமாலையை என் கையிற்கொடுத்து உமக்குத் தரும்படியுரைத்தாள். இதோ இதை ஏற்றுக்கொள்ளும் என்றாள். அதைக் கேட்டதும் விதூஷகன், தலைமேல் கையிட்டுக்கொண்டு, ஐயோ! அவள் கதி இப்படியா முடிந்தது என்று கண்ணீர்வடியப் புலம்பிக்கொண்டு இப்போது ஹாரத்தை நான் எப்படி ஏற்றுக்கொள்வேன்? என் கை எழாதேயென்று சும்மாவிருக்க, சுசங்கதை: ஐய! அவள் கடைத்தேறும்பொருட்டு நீர் தயைசெய்து எப்படியாயினும் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று வேண்டவே, அப்படியானல் ஆகட்டும்; இது நம்மாசற்குக் கொஞ்சம் போதுபோக்காயிருக்கும்; தா என வாங்கிக்கொண்டு, அதனையுற்றுநோக்கி: சுசங்கதாய்! இது சாமானியமாயிருக்கவில்லை; வெகு விலைபெற்றதாயிருக்கிறதே; இப்படிப்பட்டது அவளுக்குக் கிடைத்தவிதம் என்னவென்று கேட்டான். அதற்கு அவள்: வசந்தகரே! இதைப்பற்றி நானும் அவளைக் கேட்டேன்; அவள் அந்த நீ விசாரிக்கவேண்டாமென்று கண்களில் நீர் ததும்ப மிகவும் துக்கித்தாள்; அதனல் மறுபடியும் அதை நான் கேளாமல் விட்டுவிட்டேன் என்று கூறினள். வசந்தகன்: இதனுலேயும் உதாரகுணத்தினுலேயும் அவள் மேன்மையான குலத்திற்பிறந்தவளென்று நினைக்கின்றேன் என்ன, சுசங்கதையும் ஆம், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது என்றுசொல்

வித் தலையெடுத்துப்பார்த்து: ஐய! வசந்தகரே! அதோ ராஜா அவர்கள் ராணியார் மாளிகையினின்று வந்து படிகமண்டபத்தில் வீற்றிருக்கின்றார்; ஆதலால் நீர் போம்; நானும் தேவியாரிடம் சென்று செய்யவேண்டுவதைச் செய்கிறேனென்று போய்விட்டாள்.

ராஜாவானவன், வாஸவதத்தையைச் சமாதானம் பண்ணி வசந்தகனை விடுவித்துச் சாகரிகையைக்குறித்து ஒன்றுஞ்செய்யமாட்டாமலும், அவளுடைய நிலை இன்னதென்று தெரியாமலும் தவித்துக்கொண்டு, சாகரிகையைப்பற்றி வந்த துக்கத்தைத் தோழனோடு சொல்லியாகிலும் ஆறலாமே; அவனையும் காணோமே; என்னசெய்வோமென்று பரிதாபமாய்ப் படிகமண்டபத்தில் வந்து உட்கார்ந்திருந்தான்.

வசந்தகனும் சுசங்கதை கொடுத்த அந்த ரத்தினஹாரத்தோடு ராஜாவண்டைசென்று, என் பிரியமான தோழனே! வாஸவதத்தையினின்றுந்தப்பி இந்தக் கண்களாலே உன்னைப் பார்க்கும்படி நான் வந்ததற்குச் சந்தோஷிக்கிறேனென்று சொல்ல, ராஜா: உன் முகத்தைப் பார்க்கும்போதே நீ சந்தோஷமடைந்ததாய்த் தெரிகிறது. சாகரிகையின் செய்தி ஏதாகிலும் தெரிந்திருந்தால் சொல்லப்பா என்று கேட்க; அவன் முகம் வாடித் தலையிறங்கிக்கொண்டு நின்றான். அதுகண்டு அரசன்: என்னடா அப்பா! தலையிறங்கி நிற்கிறாய் என்று கேட்க, விதூஷகன்: அது விசனமான செய்தியாதலால் சொல்ல நாவெழவில்லையெனவே, ராஜா: ஐயோ! அந்தத் திக்கில்லாத பரதேசிப்பெண் உயிரைத் துறந்தாளா! இப்படிதானா முடிந்ததென்று கீழேவிழுந்து மூர்ச்சைபோய், சற்றுநேரமானபின் மூர்ச்சைதெளிந்து எழுந்திருந்து தன் உயிரைநோக்கி: ஓ பிராணங்களே! சரியா

ய்ப் பாதுகாக்க வல்லமையில்லாத என்னை விட்டுவிடுங்கள்; நீங்கள் வல்லவராகுங்கள்; என் பேச்சைக் கேளுங்கள்; துரிதமாய்ப்போய் அவளைச் சேர்ந்துகொள்ளாமற்போனீர்களாகில் அவளால் ரெகிக்கப்பட்டுத் தவிப்பீர்கள்; உங்களுக்கு ஆதாரவாயிருந்த அந்த நடையழகி இப்போது வெகுதூரஞ் சென்றுவிட்டாள் என்னும் கருத்துள்ள

"உயிர்காமுறணி லெனைவிடுமின்னுமக் குற்றவளாஞ்
செயிர்தீரழகினள் சேய்மையளாயினள் சேருமினவ்
வொயிலார்நடையளை யொல்லையின்றேவ டான்கவர
வெயிலாற்புழுப்படும் வேதனைசேர்ந்து விழிப்பீர்களே"

என்ற இப்பாட்டைப் பாடி பிரலாபித்துக்கொண்டிருந்தான். அப்போது வசந்தகன்: தோழா! நீர் வேறொன்றும் எண்ணாதேயும்; ராணியார் நம்முடைய சாகரிகையை உஜ்ஜயினிக்கு அனுப்பிவிட்டாராம். இது உமக்குப் பிரியமல்லாததாகையால் விசனகரமென்றேன் என்றான். ராஜா: வசந்தக! ஆஹா! தேவி என் கருத்தை அனுசரியாதிருக்கிறாளே; நல்லது, இச்செய்தி யார் உனக்குச் சொன்னதென்றான். அதற்கு வசந்தகன்: சுசங்கதை சொன்னாள்; இன்னொரு செய்தி கேளும்; அந்தச் சாகரிகை, எதற்காகவோ சுசங்கதையைக்கொண்டு இதோ இந்த ரத்தினஹாரத்தை என் கையிற் கொடுத்தாளென்றான். அதுகேட்டு அரசன்: என்னப்பா வேறுகாரியம்? எனக்குச் சிறிது ஆறுதலாயிருக்கட்டுமென்றுதான் கொடுத்திருப்பாள். அதைக் கொடு என்று வாங்கி அணிந்துகொண்டு ‘அந்த மணிமாலிகை அவளுடைய கழுத்தை ஆலிங்கனஞ்செய்துகொண்டிருந்து அந்தப் பாக்கியத்தை இழந்ததனால் அத்தன்மையான என்னுடலுக்குத் துணையாயிருக்கின்றது’ என்று பரிதாபமாய்ப் பேசி, விதூஷகனைநோக்கி:

அப்பா! நீதான் தரித்துக்கொள், அதைப்பார்த்து நான் கொஞ்சம் ஆறுகிறேன் என்று அவன் கையிற் கொடுத்தான். அவன் அதை வாங்கித் தரித்துக்கொள்ளக் கண்டு, ராஜாவானவன் கண்ணீர்ததும்ப, இனிச் சாகரிகையை நான் காண்பேனோவென்று துக்கித்தான். அப்போது விதூஷகன் நாற்புறமும் பார்த்து: ஓ மகாராஜாவே! வாயை மூடிக்கொள்ளும், இப்படி அழாதேயும், இங்கு ஏதோ அடியோசை கேட்கிறது, தேவியின் பரிசாரிகையோ அல்லது தேவியோ நாற்புரமும் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னான்.

இப்படியிருக்க, அந்தப்புரக் காவற்காரியாகிய வசுந்தரையென்பவள் கையும் பிரம்புமாய் வந்து அரசனைப் போற்றி, ஐயா எங்கள் ஆண்டவரே! ருமண்வானுடைய உடன்பிறந்தாள் மகனாகிய விஜயவர்மா என்பவன் தங்கள் வாசலிற் காத்திருக்கிறான் என்று விண்ணப்பஞ்செய்து, சீக்கிரம் இட்டுக்கொண்டுவாவென்று ராஜா கட்டளையிட்டதனால், அவனை இட்டுக்கொண்டு வந்து அரசன் சமுகத்தில் விட்டாள். அந்த விஜயவர்மா அரசனைப் போற்றிநின்று, மகாப்பிரபுவே! நம்முடைய ருமண்வான் வெற்றிபெற்றான்; இது தங்களுக்கு அனுகூலகாலம் என்று கூறக்கேட்டு, உதயன மகாராஜன்: 'இது மிகவும் அருமை, வெகு சீக்கிரத்தில் பெரியகாரியத்தைச் சாதித்தான்' என்று ருமண்வானை மிகக் கொண்டாடி, ஓ விஜயவர்மனே! பகைவனை வென்ற விதத்தை விவரித்துச்சொல் என, அவன் உரைக்கலாயினான்.

சுவாமி! தங்களுடைய கட்டளையினால் இங்கிருந்து ருமண்வான் நால்வகைப் படைகளோடுஞ் சென்று, கோசலதேசாதிபதி விந்தியமலையினிடத்துள்ள கோ

ட்டையிலிருக்குமளவில், அக்கோட்டையை முற்று கைசெய்தார். செய்யவே அவ்வரசன் அதனைப் பொருமல் தன்னுடைய பெருத்த யானைப்படையோடு வெளியேவந்து நமது சேனைமேற்பாய்ந்து அதைத் தன் யானைகளால் மிதிப்பித்துக்கொண்டுவருகையில், நம்முடைய சேனாதிபதி அங்ஙனஞ் செய்யவொட்டாமல் தன் படையை ஆயத்தப்படுத்திப் போர்செய்யத் தொடங்கினார். இப்படியாக இருதிறத்தாரும் எதிர்த்து ஒருவர்மேலொருவர் பிரயோகிக்கும் ஆயுதங்கள் கவசங்களின்மேல் தாக்கி நெருப்புப்பொறிகள் கிளம்பவும், கவசம்பிளந்து உடலிற்பாய்ந்து தாரைதாரையாய் உதிரமொழுகவும் கைகால்முதலிய அவயவங்களும் கிரீடத்தோடுகூடிய சிரங்களும் அறுந்து விழவும், பயங்கரமான யுத்தம் நடந்தது. அப்படி நடக்கையில் கோசலராஜன் ஓர் மதயானைமேல் ஏறிக்கொண்டு நம்படை தாவரிக்கமாட்டாமற் கலங்கி ஓடும்படி செய்தான். அதுகண்டு நம்முடைய ருமண்வான் மிகவும் கோபங்கொண்டு நூற்றுக்கணக்காய்க் கூர்மையான அம்புகளைப் பிரயோகித்துப் பகைவனை மாளச் செய்தார் என்று சொல்லுகையில், உதயனமகாராஜன்: "ஆ! கோசலபதியின் வீரம் மிகப் பெரிது" என்று சிலாகித்து மற்றதுஞ் சொல் என்று வினவ, விஜயவர்மர் சொல்லுகிறான்: சுவாமி! பின்பு ருமண்வானவர், அரசனிறந்ததனால் கையற்றுநின்ற பகைவன் சேனையைத் துரத்திக் கோசலநாட்டை வசப்படுத்தி அதைக் காத்துவரும்பொருட்டுத் தம் தம்பியாகிய ஜயவர்மாவை அங்கே வைத்துக் காயம்பட்டு நொந்திருக்கிற தன் சேனையோடு மெல்லமெல்ல வந்துகொண்டிருக்கிறார் என்று சொல்லக்கேட்டு, அரசன் வெகு சந்

தோஷமடைந்து இந்த ஜயசமாசாரஞ்சொன்ன விஜய வர்மனுக்கு வெகுமதி கொடுப்பி என்று வசுந்தரை யென்பவளை யவுகந்தராயணனிடம் அனுப்பினான். அப்படியே அவளும் விஜயவர்மனை இட்டுக்கொண்டு போய் வெகுமதி கொடுப்பித்தாள்.

இது இப்படியிருக்க, யவுகந்தராயணன், சாகரிகை யை ராணி கட்டிக் காவலில்வைத்த செய்திகேட்டு அதை விடுவிக்கும்படி ஒரு உபாயத்தை யோசித்து, இந்திரஜால வித்தைக்காரனொருவனை அழைப்பித்து: "நீ நம் ராணியாரிடத்துக்குப்போய் நான் உஜ்ஜயினியி லிருந்துவந்தேன்; இந்திரஜாலவித்தையில் நான் நிபுண னென்று சொல்லி நம்முடைய காரியத்தை நிறவேற்ற வேண்டுமென்று காரியத்தை அவனுக்கு ரகசியமாய்ச் சொல்லியனுப்பினான். அவனும் அப்படியே வாஸவ தத்தையினிடம் சென்று தான் உஜ்ஜயினி நகரத்தானெ ன்றும், தன் பேர் சம்வரணசித்தியென்றும், இந்திரஜாலத் தில் வல்லவனென்றும் அறிவிக்க, தேவி கொஞ்சம் குதூஹலமாய்க் காஞ்சனமாலையைக் கூப்பிட்டு இவனை நம் அரசரிடம் இட்டுக்கொண்டுபோ என்று கட்டளை யிட்டாள். அப்படியே காஞ்சனமாலை அவனை ராஜ சமுகத்தில் இட்டுக்கொண்டுபோய் அறிவிக்க, அந்த அயிந்திரஜாலிகன் ராஜாவைக் கண்டு கும்பிட்டு: சுவாமி! நான் ஆகாசத்தில் மலையையும், பூமியில் ஆகா சத்தையும், நீரில் நெருப்பையும், பகலில் இரவையும் காட்டமாட்டேனேன். இதெவ்வளவு? உங்களுக்கு யா ரைப்பார்க்க இஷ்டமோ அவர்களையெல்லாம் அழைப் பிப்பேன்; பாருங்கள் என்று சொல்லிநிற்க, ராஜா: நல்லது, காஞ்சனமாலாய்! இவன் தன் பிறந்தகத்தூரா னெனத் தேவிக்கு இவன்மேல் அபிமானமிருக்கலாம்.

அன்றியும் இவன் என்னென்னவோ தற்புகழ்ச்சியாய்ச் சொல்லுகிறான்; அதைப் பார்ப்போம். தேவியையும் இங்கே இட்டுக்கொண்டுவா என்றான். அவள் இச்செய்தி சொல்ல, ராணியும்வந்து பர்த்தாவின் கட்டளையினால் குதூஹலமாய் உட்கார்ந்தாள். பின்பு அரசன் இந்திரஜால வித்துவானைநோக்கி: 'இனி நீ உன் வித்தையைக் காட்டலாம்' என்று கட்டளையிட, அவன் தன் கையிலிருந்த மயிற்றோகைக் கற்றையைத் திருப்பி இதோ பாருங்கள், கும்பிடுங்கள்; வானத்தில் பிரமன், விஷ்ணு, சிவன், இந்திரன் இவர்களெல்லாம் வந்திருக்கின்றனர்; சித்தர் விச்சாதார் முதலினோரும் வந்து ஆடுகின்றனர் என்றான். என்றவுடனே, அரசன் முதலானோர் தலையெடுத்து வானத்தைநோக்கி: அவன் சொன்னபடியே மும்மூர்த்திமுதலானோர் அங்கே விளங்கக் கண்டு மிக்க ஆச்சரியத்தோடு கைகூப்பிக் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க, யவுகந்தராயணன் "சிங்களத்தீவிலிருந்து ருமண்வானிடம் சேர்ந்திருந்த வசுபூதி, பாப்பிரவியன் என்பவர்கள் தன்னிடம்வந்து சேர்ந்தார்கள்; அவர்களை முன்னிட்டு அனுப்பினேன்; நானும் சொற்பகாரியமிருப்பதை நிறைவேற்றிப்போட்டு உடனே வருகிறேன்" என்று சொல்லியதை வாசற்காப்பான் அரசனுக்கு விண்ணப்பஞ்செய்தான். இதைக் கேட்டவுடனே வாஸவதத்தையானவள் அரசனை நோக்கி, இந்த வேடிக்கைபார்ப்பதை நிறுத்தி என் மாமனிடத்திருந்து வந்திருக்கிற வசுபூதியை அழைப்பித்து விசாரியுங்கள் என்று சொல்ல, அரசன் அதை அங்கீகரித்து இந்திரஜால வித்தைக்காரனை, உன் வித்தைகளைச் சற்று நிறுத்திவை என்று கட்டளையிட்டான். அவன்: ஐயா! இன்னம் ஒரு வேடிக்கையைமாத்திரம் தாங்கள் பார்க்கவேண்டுமென்று வேண்ட, ராஜா: ஆகட்டும், பின்னிட்டுப் பார்ப்போமென்று சொல்லிக் கொண்டிருக்க, ராணியானவள் தன் வேலைக்காரியைக் கூப்பிட்டு இந்த இந்திரஜாலகனுக்கு வெகுமதி

கொடுத்தனுப்பு என்று ஆக்கியாபித்தாள். அவளும் அவ்வித்தைக்காரனை இட்டுக்கொண்டுபோயினள்.

அப்போது அரசன் வசுபூதியையும் பாப்பிரவியனையும் தன்னிடம் இட்டுக்கொண்டுவரும்படி வசந்தகனையனுப்ப, அவனும் எதிர்கொண்டுபோய் அவர்களை அரமனைக்கு இட்டுக்கொண்டுவருகையில், வசுபூதி இவ்வரசனுடைய பெருஞ்செல்வத்துக்கு வியந்துகொண்டே வசந்தகன் கழுத்தில் ரத்தினஹாரத்தைக் கண்டு, நெடுநாளாய்க்காணுத நம்பிராஜகுமாரத்தியை இன்று காண்போம். இதோ இந்த ஹாரம் நம்மைப் பிரயாணப்படுத்தும்போது நம்மரசன் தன் மகளுக்குக் கொடுத்ததல்லவா என்று பாப்பிரவியனோடு சொல்ல, அவனும் ஆம், எனக்கும் அப்படியே தோன்றுகின்றது; இது இவனுக்கு வந்த வரலாற்றை இவனைக் கேட்போம் என்று சொல்ல, வசுபூதியானவன்: அப்படி கேட்கலாகாது; அரசர் மாளிகைகளில் எத்தனையோ மேலான பூஷணங்களிருக்குமென்று சொல்லி, ராஜாவின் சமீபத்தில் வந்து கண்டு அவனுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து அவனாற் பெறத்தக்க மரியாதைகளைத் தானும் பெற்று பாப்பிரவியனோடு ஆசனத்தில் உட்கார்ந்திருக்க, வத்சராஜன் நம்முடைய சிம்மளேசுவரனுடைய யோகக்ஷேமங்களைச் சொல்லுமென்று வினவ, வசுபூதியானவன்: வாஸவதத்தையைக் கண்டு திடுக்கிட்டு, ஓகோ! நாமென்ன சொல்லுகிறது; சொல்லுஞ்செய்தி இவளுக்கு மனவருத்தமாயிருக்குமல்லவோவென்று சற்றுநேரம் வானத்தை ஏறப்பார்த்துக் கொண்டிருக்க, பாப்பிரவியன்: "என்ன யோசிக்கிறீர்? பின்னிட்டாகிலும் இதைச் சொல்லித்தானே தீரவேண்டும், இப்போதே சொல்லிவிடும்" என்று தூண்டினதனால் வசுபூதி சொல்லத்தொடங்கினன்:

ஐயா! மகாராஜாவே! நான் துர்ப்பாக்கியவசத்தால் இச்செய்திசொல்லலாயினேன். இந்தப் பாப்பிரவியன், மந்திரி யவுகந்தராயணனால் அனுப்பப்பட்டு எங்களரசரிடம் வந்து, தேவியான வாஸவதத்தை தீயிலகப்பட்டு

மாண்டாள்; ஆதலால், தங்கள் குமாரத்தியை எங்கள் மகாராஜாவுக்குக் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ததனால், அவர் சற்றுநேரம் சோகத்தினால் சிந்தித்திருந்து பின்பு மகளைத் தங்களுக்குக் கொடுக்க வுடன்பட்டு ரத்நாவலி என்னுந் தன் அருமைத் திருமகளை என்னோடும் பாப்பிரவியனோடும் கூட்டிக் கப்பலேற்றி அனுப்பினார். இவ்வாறு சிங்களேசுவரரால் அனுப்பப்பட்ட நாங்கள் கடலில் வந்துகொண்டிருக்கையில், வழியில் கப்பல் உடைந்ததனால், யாவரும் மூழ்கிப்போய் நாங்கள் இருவர்மாத்திரம் தேறிக் கரைகண்டு சேர்ந்தோம். அந்தப் பேதை ரத்நாவலி எந்தக்கதியானாளோ அறியோம் என்று சொல்லிக் கண்களில் நீர்ததும்ப ஒன்றுந்தோன்றாமல் தலையிறங்கிக்கொண்டிருந்தான். இதைக் கேட்டவுடனே அரசன், இந்தப் பொய்யை யார் கற்பித்தார்களோ வென்று அதிசயப்பட்டுக்கொண்டு இருக்கையில், ரத்நாவலி கடலில் மூழ்கிப்போனதற்காக வாஸவதத்தை அழத்தொடங்கினாள். ராஜா அவளைத் தேற்றி, வசுபூதிக்குத தெரியாமல் பாப்பிரவியனை இதின் உண்மையென்னவென்று வினவினான். அதற்கு அவன் விடைசொல்லாமுன்னமே அரமனையில் தீப்பற்றி நாற்புறமும் புகை சூழ்ந்துகொள்ள, அங்கங்கே சுவாலைகள் எழும்புகின்றன என்று ஒரு கூக்குரல் உண்டாயிற்று. அதைக் கேட்டதும் அரசன் பிரமித்துத் தன் தேவியார் அருகில் இருப்பதை மறந்து 'ஐயோ! சிங்களத்திற் பிறந்த பொய்ச்சொல் மெய்ச்சொல்லாகுங் காலநேரிட்டதே என்செய்வேன்' என்று திகிற்பட்டு இருக்கையில், வாஸவதத்தை 'என் பிராணநாயகரே! இந்தவேளை காப்பாற்றும் காப்பாற்றும்' என்று அரற்றினாள். அதுகேட்டு அரசன்: பெண்கள்நாயகமே! நீ அஞ்சவேண்டாம். நான் இக்கூக்குரலால் மயங்கி நீ இங்கிருப்பதையும் மறந்தேன் என்று சொல்ல, அவள்: என்னைக்குறித்தல்லவே நான் முறையிடுகிறது; மாயாவியாகிய நான் பேதையான சாகரிகையை அரமனைக்

குள் கட்டிப்போட்டிருக்கிறேன். ஐயோ! அவள் என்னவானளோ, என்செய்வேன்? பெண்கொலைக் காளானேனே என்று பரிதவித்தாள். அதுகண்டு அரசன்: தேவி! அதற்கும் நீ அஞ்சாதே, நானேபோய் அந்தப் பெண்ணை இவ்வாபத்தினின்றும் தப்புவிக்கிறேனென்று சொல்லிச் சரேலென்று எழுந்து ஆர் தடுத்ததையுங்கேளாமல் அக்கப்புறஞ் சென்றான். உடனே தேவியும், ஐயர் அங்குச் சென்றதனால் நானும் அங்கேயே போகிறேன் என்று போக, வசந்தகனும், நீங்கள் இருவரும் அப்படியானால், நான் இங்கிருப்பதிற் பயனென்னென்று கூடவே சென்றான். வசுபூதியும் பாப்பிரவியனும் இவ்வாறு நேரிட்டதைக்குறித்து வெறுத்துக்கொண்டே அங்குச்செல்ல எத்தனித்தார்கள்.

கட்டுண்ட சாகரிகையோ நமது துக்கந்தீருங்காலம் நேர்ந்ததென்றிருந்தவள், வச்சராஜன் தன்னருகேவரக் கண்டு களிப்புற்று: 'ஐயரே! என்னைக் காப்பாற்றியருளவேண்டும்' என்றாள். அதற்கு அரசன் அஞ்சவேண்டாமென்று சொல்லி அவ்விடத்தைச் சுற்றிப்பார்க்க, எங்கும் ஒரு நெருப்புப்பொறியாவதில்லாதிருந்ததனால் வியப்புற்று, அங்கேவந்த வசந்தகன் முதலானாரைநோக்கி: ஓகோ! இதென்ன கனவா? அல்லது மதிமயக்கமா? அல்லாமற்போனால் இந்திரஜாலமா என்று சொல்ல, விதூஷகன்: இது இந்திரஜாலந்தான், சந்தேகமில்லையென்றான். பிரபு அதை அங்கீகரித்து, நீ சொல்வது மெய்யே, அந்த வித்தைக்காரன் போம்போது இன்னொரு விநோதம் பார்க்கவேண்டுமென்றானே, நாம் வசுபூதியை அழைத்து விசாரிப்பதில் நோக்கந்தால் உபேக்ஷைசெய்தோம்ஆகையால் அவன் இப்படிச் செய்துபோயிருப்பான் என்று சொல்லிச் சந்தோஷமாய்ச் சாகரிகையைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு தேவிமுன்னிலையில் விட்டு, இதோ இவளை அபாயமின்றிக் கொணர்ந்து சேர்த்தேனென்றான். அதற்கு அரசி புன்னகைகொண்டு சரிதானென்றாள். இப்படியிருக்க வசுபூதி, சாகரிகையை உற்றுப்பார்

த்து: இவள் நம்முடைய ராஜகுமாரத்தியாகிய ரத்நாவலிபோலும் என்று பாப்பிரவியனோடு ஏகாந்தமாய்ச் சொல்ல, அவனும் ஆம், எனக்கும் அப்படியே தோன்றுகின்றது என்றான். அப்போது வசுபூதி அரசனைநோக்கி: சுவாமி! இந்தக் கன்னிகை எங்கிருந்து வந்தவளென்று வினவ, அவன் எனக்குத் தெரியாது, தேவிக்குத் தெரியும் என்றான். அதுகேட்டு வாஸவதத்தையானவள்: இவள் கடலிலே அகப்பட்டாள் என்று மந்திரியாகிய யவுகந்தராயணன் இவளை எனக்குக் கொடுத்தான். ஸாகரத்திற் கிடைத்ததனால் இவளுக்குச் சாகரிகையென்று பெயரிட்டுவைத்துக்கொண்டு இருக்கிறேன். இவ்வளவுதான் எனக்குத் தெரியும் என்று சொன்னாள். சொல்லவே விதூஷகனுடைய கழுத்தில் ரத்தினஹாரமிருப்பதையும், இவள் கடலிற் கிடைத்தாள் என்பதையும் ஒத்திட்டு, இவள் சிம்மளேசுவரனுடைய மகளேயென்று நிச்சயித்துச் சாகரிகையை நோக்கிக் கண்ணீர்ததும்பத் திடறிவருஞ் சொற்களால், "அம்மா! உனக்கு இப்படிப்பட்ட தசையா வந்ததென்ன, அக்கன்னிகை: இவன் வசுபூதியென்று கண்டுகொண்டு அவன்முன் விழுந்து அழுதாள். அழவே, தேவி இவள் தன் மாமன் மகளெனத் தெரிந்துகொண்டு புலம்பிப் பின்பு, அம்மா அழாதே, உனக்கு இனி யாதும் குறைவில்லையென்று ரத்நாவலியைத் தேற்றிக்கொண்டு இருந்தாள். வசுபூதியும், அம்மா! விசனப்படாதே; நீ விசனப்பட்டால் உன் அத்தைமகள் சோர்ந்துபோகிறாளென்று தேற்றரவு சொல்லிக்கொண்டு இருக்கையில், தேவி அவளைக் கட்டிக்கொண்டு, ஐயோ தெரியாமல் நான் இவள் திறத்தில் கொடுமை பலசெய்தேன். அவைகளை நினைக்க எனக்கு வெகு வெட்கமுந் துக்கமும் உண்டாகின்றன. இவள் கட்டை அவிழ்த்துவிடவேண்டும் என்று அரசனோடுசொல்ல: அவனும் சரேலென்று எழுந்து சாகரிகையின் கைக்கட்டை அவிழ்த்துவிட்டான். பின்பு ஆரியானவள், மந்திரியை நோக்கி: ஐயா! நீர் உண்

ணமையை அறிவியாமையாலல்லவோ நான் கொடுமை செய்து பழிக்காளானேன் என்றாள். இவ்வளவில் யவுகந்தராயணன், தான் செய்தவைகளெல்லாம் குற்றமாயினும், ராஜ்யம் கிடைக்கும் என்கிற சித்தன்பேச்சை நம்பி ராஜபக்தியாற் செய்தவை ஆதலால் ராஜா இந்த நியாயமறிந்து மன்னிப்பார் என்று தயிரியங்கொண்டு, "மகாப்பிரபுவே! நான் தங்களோடு சொல்லாமற் செய்தவைகளை மன்னிக்கவேண்டுமென்று அவர் பாதத்தில் விழுந்து கும்பிட்டான். அதற்கு அரசன்: என்ன நீ செய்தகாரியங்கள் என்று வினவ, சித்தன் அந்தக் கன்னிகையைப்பற்றிச் சொன்னதும், அதனால் பாப்பிரவியனைத் தான் அனுப்பினதும் முதலாக நடந்த சங்கதிகள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். அதுகேட்டு உதயனராஜன், இதெல்லாம் சரிதான்; அந்தப் பெண்ணை வாஸவதத்தையின் வசத்தில் ஒப்பித்தகாரணம் என்னவென்று கேட்க, வசந்தகன்: ஐயா மகாராஜாவே! நீங்கள் அந்தக்காரணம் கேட்கவேண்டாம்; அந்தப்புரத்திலிருந்தால் நீங்களே பார்த்துப் பரிக்கிரகிக்கும்படியாகும்; இது நல்லவழியென்று மந்திரிசெய்தார் என்ன, அரசன் மந்திரியைப் பார்த்து: உம்முடைய கருத்தை விதூஷகன் அறிந்தான் போலும், ஆனால் இந்திரஜாலவித்தைக்காரன் செய்கையும் உம்மாலேதான் ஏவப்பட்டதோவென்றான். அதற்கும் வசந்தகன், ஆம், அப்படித்தான் நடந்தது; இல்லாவிட்டால் அந்தப்புரத்தினுள்ளே கட்டுண்டிருந்த சாகரிகையை வசுபூதி காண்பதெப்படி? அவள் செய்தியை உங்களுக்குத் தெரிவிப்பதெப்படி? இதெல்லாமிருக்கட்டும், இனி நடக்கவேண்டியதற்கு ராணியவர்கள் கட்டளையிடவேண்டும் என்றான். அதைக் கேட்டுத் தேவி புன்னகைகொண்டு, இத்தனை மறைவென்ன? இவளை நம்மையருக்குக் கொடுத்துவிடு என்று நேராகச் சொல்லேன் என்னக்கேட்டு, விதூஷகன்: மந்திரியின் கருத்தை ராணியார் அறிந்துகொண்டார்கள் என்று உரைக்க, வாஸவதத்தையானவள்: ஆம்; நான்

என் மாமன்மகளாகிய தங்கைக்கு இவ்வளவு நன்மையாவது செய்யாமல் விடுவேனோவென்று தன் ஆபரணங்களையெல்லாம் அவளுக்கு அணிந்து அரசனிடம் வந்து, இவளுக்கு உற்றார் பெற்றார் யாவரும் இல்லை; ஆதலின் ஐயரவர்களே இப்பேதையைக் கைக்கொண்டு இவள் தம்மவரை நினையாதிருக்கும்படி காத்துவரவேண்டுமென்று ராஜன் கையில் கொடுத்தாள். ராஜாவும் வெகு கவுரவத்தோடு அவளைக் கைப்பிடித்து அப்படியே செய்கிறேன் என்றான். இதுகேட்டு வசந்தகன் கூத்தாடத் தலைப்பட்டான். வசுபூதியும் பாப்பிரவியனும் எங்கள் எத்தினம் சபலமாயிற்று; ரத்தினத்தைத் தங்கத்திற் பதித்துவிட்டோமென்று ஆனந்தித்தார்கள். மந்திரி அரசனைநோக்கி: மகாராஜா அவர்களுக்கு நான் இன்னும் செய்யத்தக்க நன்மை உண்டாகில் கட்டளையிடலாமென்ன, ராஜா: நீர் மந்திரியாயிருக்க எமக்கு யாதுங் குறைவில்லை; கடவுள் கடாக்ஷத்தால் மாரி மாறாதுபெய்து விளைவுகள் வளர்ந்தோங்கிக் குடிகளெல்லாஞ் செழித்து நல்லோராமோதிக்கவும், தீயோர் கெடவும், நமது நாடு வாழவேண்டும் என்று தெய்வ பிரார்த்தனைசெய்து அவளோடுகூடிச் சுகமாக வாழ்ந்திருந்தான்.

முற்றிற்று.

C. K. S. PRESS, VEPERY, MADRAS, 1880.

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யு

புத்தகங்களின் பட்டி.

	அணா
நூதன விவசாயம்	1
இந்துதேசத்துச் சிற்ப சித்திர கீதநூல்	1
ஜார்ஜி ஸ்டீவின்சன் என்னும் இருப்புப்பாதை சிற்பசாஸ்திரி சரித்திர சங்கிரகம்	1
நீராவியும் நீராவி இயந்திரமும்	1
ஒதெல்லோ டெஸ்டிமோனு இவர்களுடைய கதை	1
அத்தேனே நகரத்து தைமன் சரித்திரம்	1
ஒரு கொல்லன் பிள்ளை கதை	1
கொலம்பஸ் சரித்திரம்	1
லார்ட் க்ளைவ் சரித்திரம்	2
இளமையிற கல அல்லது அஞ்சுதிருடர் கதை	2
பாலவியாபாரிகள் கதை	2
பூகம்பம், எரிமலை இவைகளின் வரலாறு	3
அந்தி கதை	4
பௌதிக பூகோளம்.—தமிழ் மொழிபெயர்ப்பு படங்களுடன்	4
பூமிசாஸ்திரபடங்கள்.—10 அடங்கிய புத்தகம்	12

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்.

ஹாம்லெத்	1
மக்பெத்	1
வெனிஸ் வர்த்தகன்	1
லீயர் மகாராஜன் கதை	1
ரோமியோ ஜூலியத்து என்பவர்களுடைய கதை	4

காளிதாசன் முதலிய மஹாகவிகள் செய்த ஸமஸ்கிருத நாடகக் கதைகள்.

மாளவிகாக்கினிமித்திரம்	1
விக்கிரமோர்வசி	1
உத்தர ராமசரித்திரம்	1
சாகுந்தலம்	2

அறிவிப்பு.

ஜநவிநோதிநி

இஃது

நீதியும் விநோதமுமான விஷயங்களைக் கொண்டிருக்கிற

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

விலை [illegible]

வருஷத்துக்குக் கையொப்பம் ரூபாய் 1½.

வெளிநாட்டிலுள்ளோர் (சென்னையில் நுங்கம்பாக்கம் பழைய காலேஜில்) இந்தச் சங்கத்தாரின் காரியதரிசி பேருக்குத் தபால்முத்திரையாகவாவது, மணி ஆர்டராகவாவது, இன்னும் வேறு முகாந்தரமாயாவது ரூ.1-14-0 மாத்திரம் அனுப்பினால், இந்தச் சித்திரவிநோதத்தோடுகூடிய ஸஞ்சிகை பன்னிரண்டுமாதத்திற்கு அவரவர்களிருக்கும் ஸ்தானத்திற்கு வந்து சேரும். சென்னை நகரத்திலிருக்கும் கையொப்பக்காரர் வருஷம் ஒன்றுக்கு 1½ ரூபாய்தான் கொடுக்கவேண்டும்.

நூதன கையொப்பக்காரர்கள் எந்தமாதத்தில் சேர்ந்தாலும் வருஷத்துச் சந்தாவை முழுதும் அனுப்பினால், முற்பட்ட மாதங்களின் ஸஞ்சிகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

☞ சென்னை ராஜதானியைப்பற்றிய சங்கிரகமும் அந்த ஜில்லாவின் விவரணமும் சேர்த்துத் தனிச்சஞ்சிகைகளாகப் பதிப்பிக்கப்பட்ட சிறு புஸ்தகங்கள் சித்தமாயிருக்கின்றன.